விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 17 ஞாயிற்றுக்கிழமை (29.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க் குற்ற ஆதாரத்தை

# தளபதியிடம் கையளிக்கலாம்

## மொஹான் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு), இராணுவத்தினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்கோ பொதுமக்களை துன்புறுத்தியதற்கோ ஆதாரம் இருந்தால் இராணுவத் தளபதிக்கு நேரடியாக எவரும் முறைப்பாடு செய்யலாம். அதுபற்றி விசாரணை நடத்தப்படும் என அமைச்சரவையின் மூத்த சட்ட ஆலோசகர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவிடம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் விசாரணை நடத்தப்படும். இதன் மூலம் குற்றமிழைத்தர்கள் என்று கண்டறியப்படும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் பல்வேறு அரசசார்பற்ற அமைப்புகள் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பல இடம்பெற்றிருப்பதாகவும் அவற்றை நிரூபிக்கும் ஆதாரங்கள் தம்மிடம் (23ஆம் பக்கம் பார்க்க)

## பாண் விலை அதிகரிப்பு

பாணின் விலைமூன்றுரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாளை முதல் இவ் புதிய விலை நடைமுறைக்கு வரும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்களின் சங்கம் தெரிவிக் (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விஜயம் குறித்து ஐ.நா. தீர்மானிக்கவில்லை

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் காரியாலயத்திலிருந்து இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளதூதுக்குழு பற்றிய தீர்மானமெதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மேற்படி உயர் ஸ்தானிகர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் வெளியாகியிருந்த செய்திகளின் பிரகாரம் மேற்படி தூதுக் குழுவினர் இலங்கைக்கு அடுத்த வாரம் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. (23ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிவாசலை அகற்ற முடியாது

# முஸ்லிம் காங்கிரஸின் முடிபால் தம்புள்ளையில் பதற்றமான நிலை


(கொழும்பு)

தம்புள்ளை பள்ளிவாசலை அங்கிருந்து அகற்ற முடியாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிபெடுத்துள்ளதாக அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்..

இது தொடர்பான முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களின் முடிபுக்கு கட்சியின் உயர்பீடமும் நேற்று அங்கீகாரம் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து தம்புள்ளையில் பதற்றம் நிலவுகின்றது.

இந்த விவகாரம் உண்மையில் விசமத்தனமாக கிளப்பப்பட்டது என்று கூறிய அமைச்சர், காணிகளை அபகரித்து, பள்ளிவாசல்களை கட்டுகின்ற ஒரு கூட்டமாக முஸ்லிம்களை காண்பிக்கும் முயற்சியே இது என்றும் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் அரசாங்க உயர்மட்டத்தில் ஆரம்பத்தில் ஒரு தடுமாற்றம் காணப்பட்டதாக கூறிய அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஆனால், அரசாங்கத்துக்கு உள்ளே இருக்கும் தீவிரப் போக்குடைய சக்திகள் சட்டத்தை தமது கையில் எடுத்துக் கொள்வதற்கு இடம்தராத வகையில் அரசாங்கம் நடந்து கொள்ள



வேண்டும் என்றும் கூறினார்.

அதே (23ஆம் பக்கம் பார்க்க)

## மே தினக் கூட்டத்தில் பங்குபற்றினும் ஐ.தே.கவுக்கு தமிழர் ஆதரவு இல்லை

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசின் மேலாதிக்கத்திற்கு எதிரான ஜனநாயகப் போராட்டங்கள் தமிழ் மாகாணங்களில் வெகு விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தகைய ஜனநாயக அரசியல் போராட்டங்களுக்கு பிள்ளையார் சுழி போடுவதாக எமது பொது எதிர்க் கட்சிகளின் மே தின கூட்டம் யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்க் கட்சிகளின் பொது மே தினக் கூட்டம் யாழ். நகரில் நடத்தப்படுவது (23ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரமான வாழ்வு வடக்கு மக்களுக்கு தேவை

### நேரில் சென்று ரணில் கருத்து



(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களுக்கு சுதந்திரமான வாழ்வும், அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என பாராளுமன்றில் பேசுவேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.,கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பூநகரி சந்தியிலுள்ள முனியப்பர் ஆலயத்தில் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர். இதன்பின்பு மக்களுடன் கலந்துரையாடும்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு (23ஆம் பக்கம் பார்க்க)

# கொத்தணிக் குண்டு பாவனை ஒழிப்புக்கான குழு விசாரணை

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை தாம் ஆரம்பித்திருப்பதாக கொத்தணிக் குண்டுகளின் பாவனையைத் தடைசெய்வதற்கான கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் தாம் அதீத கரிசனை கொண்டிருப்பதாக அசோசியேற்றட் பிரஸ் எனும் ஊடகத்துக்கு இவ்வமைப்பின் பணிப்பாளர் லோறா சீஸ்மன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் தமது அமைப்பின் நிபுணர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது படைத்தரப்பினர் கொத்தணிக் குண்டுகளை பயன்படுத்தி இருந்ததை அசோசியேற்றட் பிரஸ் கடந்த 26 ஆம் திகதி செய்தியாக வெளியிட்டிருந்தது. போர் இடம்பெற்ற பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த கெத்தணிக் குண்டுகளை ஐக்கிய நாடுகள் சபையின் கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் குழு (23ஆம் பக்கம் பார்க்க)

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog | Sri Lanka Telecom | airtel | etisalat | Sri Lanka Telecom Mobitel We Care. Always. | (CEB) | WESTERN UNION MONEY TRANSFER | HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | சுன்னாகம் | மானிப்பாய் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சங்கானை

SINGER EXPRESS PAY

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சித்திரைத் திருவிழா இறுதிநாள் நிகழ்வு

புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையமும் இறுப்பிட்டி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் இறுப்பிட்டியின் சித்திரைத் திருவிழா இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று நடைபெறும்.

காலை 9 மணிக்கு முன்பள்ளி விளையாட்டுக்களும் மாலை 1 மணிக்கு இறுதிநாள் நிகழ்வுகளும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இர்வு 8 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும்.

இறுப்பிட்டி சனசமூக நிலைய உப தலைவர் ந.கமலதாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வேலணை பிரதேச தவிசாளர் சி.சிவராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் த.தவராசா, ஜே 27 கிராம சேவகர் கு. சந்திரா, ஸ்ரீசித்தி விநாயகர் மகா வித்தியாலய அதிபர் ந.கலைநாதன், வேலணை பிரதேச சபை உறுப்பினர் தயானந்தம், இறுப்பிட்டி சனசமூகநிலையபோசகர் சி. இளங்கோ ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ஏ)

# பேருந்து மோதி இரு பெண்கள் காயம்

பேருந்து ஒன்று இரு இளம் பெண்கள் மீது மோதியதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இரவு 6.45 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நாவற்குழி சந்தியருகே இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த எஸ். அமுதினி (வயது 28) எஸ். பிரதீபா (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். வேகமாக வந்த பேருந்து அவர்களை மோதி விட்டுநிற்காமல்சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஏ-11)


**வேலையாள் தேவை**

266/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள கோல்டன் இராசையா மோட்டோர்ஸ் எனும் கடைக்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்பு: 0776141928 (8264)

**National Coolers of A.C Studies**

0212240144, 0776134790

சகலவிதமான குளிரூட்டிகளும் (Fridges), அறை குளிரூட்டிகளும் (Air Conditioners) உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

கிளை: 155-ம் கட்டையடி

கிளை: R.D.Office முன்பாக கிளிநொச்சி (8255)

**YAALH ENGLISH ACADEMY**

(077 3212 711)

வழங்கும் இன்றைய தேவை

BASIC + INTERMEDIATE + ADVANCED

**PRACTICAL ENGLISH COURSES**

FOR ADULTS + SCHOOL STUDENTS

இலவசம்: முதலிரு வகுப்புகள்
பெயர் பதிவு: 077 3212 711 மூலம்
சனி 28.04.2012 பி.ப. 4.00-5.00
எமது கல்வி முறை பற்றிய இலவசக் கருத்தரங்கு
மாணவர் + பெற்றோர் + கல்வி ஆர்வலர்
ஆகியோரை அன்புடன் வரவேற்கிறோம்.
கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க. (8169)

வகுப்பிட அனுசரணை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்

**மனோதத்துவ வைத்தியம்**

(General Psychotheraphy)

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

**Dr. P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205, 0214922403

**மீண்டும் யாழில்**

29.04.2012 முதல் 04.05.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன் (பழைய கமால் லொஜ்)
392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (C-6454)


## மரண அறிவித்தல்



## செல்வி வல்லிபுரம் ஜெகதீஸ்வரி

மில்லேன், சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வல்லிபுரம் ஜெகதீஸ்வரி *(28.04.2012)* நேற்று சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலம் சென்ற வல்லிபுரம் நேசமணி தம்பதியினரின் அன்பு மகளும் விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன் (மன்னார்), கணேஸ்வரன் (கரைச்சி பிரதேசசபை பணியாளர், கிளிநொச்சி), கணேஸ்வரி (திஷோ தையலகம்), பிரகதீஸ்வரன் (சவூதி), அமரர் ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசதுரை, வசந்தன், மனுவல் இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் அனுஷன், றலுஜன், ஜிந்து, ஜினோ, ஜிந்துஜன், லக்ஷி, திஷோ ஆகியோரின் சித்தியும் சுரேன், மது ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூத்வுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மில்லேன், சண்டிலிப்பாய் (8263) தகவல்: குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01.10.1932

இறப்பு 11.05.2011

## அமரர் வடிவேலு நாகலிங்கம்

*அமரர் வடிவேலு நாகலிங்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு பிரார்த்தனை 29.04.2012 இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.*

*உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

என்றும் உம் நினைவுடன்
குடும்பத்தினர் (8262)


அனைத்து வகையான சுவிட்ஸ் வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலும் நீங்கள் எதிர்பார்க்காத விலையில் !!!
றோயலின் ஸ்பெசல் சிக்கன் பிறைட்றைஸ் - விலை ரூ. 190. சிக்கன் சூப் - ரூ.140
☆ அனைத்து வகையான கொத்துக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலும் எமது உணவகத்தின் சூப் வாடிக்கையாளர்களுக்கான எந்த உணவகத்திலும் இல்லாத சலுகை! எமது சூப் வாடிக்கையாளர்கள் சூப் அருந்திவிட்டுத் தமது தொலைபேசி இலக்கத்தைத் தந்து வாடிக்கையாளர் அட்டை ஒன்றைப் பெறுங்கள்.
மாதாந்தம் நடைபெறும் குலுக்கலின் போது தெரிவு செய்யப்படும் வாடிக்கையாளர்கள் தமது 10 நண்பர்களுடன் ஒருமுறை இலவசமாக சூப் அருந்தலாம்.

யாழ். மண்ணில் முதல் முதலாக பொம்பே சுவிட்ஸ்ஸை அறிமுகம் செய்த, பெருமை

**றோயல் பொம்பெ சுவிட்ஸ்**

அன் சினாக்ஸ் நிறுவனத்தினருக்கே!

212, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C-6461)

உரிமையாளர்:- 0771751495

# உடற்பயிற்சி போட்டி முடிபு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டி நேற்று சனிக்கிழமை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு, முதலாம் இடம் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், இரண்டாம் இடம் புதுக்குளம் மகா வித்தியாலயம்.

(அ-3-266)

# வலைப்பந்தாட்ட போட்டி முடிபுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா சைவ பிரகாச மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றபாடசாலை அணிகளின் விபரம் வருமாறு,

**15 வயது பிரிவு பெண்கள்**

சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, குளவிசுட்டான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

**17 வயது பிரிவு பெண்கள்**

கனகராஜன்குளம் மகா வித்தியாலயம், தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு பெண்கள்**

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், தவசி குளம் அ.த.க.பாடசாலை.

(அ-3-266)

# இராசி பலன்

29.04.2012

(சித்திரை 17, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

அட்டமி முன்னிரவு 10.24 மணிவரை

பூசம் பிற்பகல் 1.11 மணிவரை

இராகுகாலம் 4.58-5.28 மணிவரை

சுபநேரம் 8.58-10.28 மணிவரை

**மேடம்** ஆடம்பர பொருட்களில் விருப்பம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் வெற்றி பெறலாம், வீட்டை புனரமைக்கும் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**இடபம்** பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, தொழிலில் போட்டிகள் மாறும், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்,மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், சந்தித்த நண்பர்களால் நன்மையுண்டு, தொழிலில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், பயனாளிகளால் ஆதாயமுண்டு, நாவன்மையால நல்ல பெயரெடுக்கும் நாள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், பிள்ளைகளால் சிறுவிரயங்கள் ஏற்படலாம், உங்களை விமர்சிக்கும் சிலரிடம் பேசாமல் செல்வீர்கள்.

**சிங்கம்** வரவைக்காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது, பயனாளிகளில் விழிப்புணர்ச்சி தேவை, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**கன்னி** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் புதிய முதலீடுகளை செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு,கலகலப்பான நாள்.

**துலாம்** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், பண வரவுகள் திருப்தி தரும் விதத்தில் அமையலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொழில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** விருந்தினர் வருகையுண்டு,பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**தனுசு** எதிர்பாராத வகையில் வீண்பழிகள் ஏற்படலாம்,குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் மறையும், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை, நண்பர்களும் வாக்கு மாறலாம்

**மகரம்** இறை வழிபாட்டால் இனிமை சேரும் நாள், கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், பிரிந்தவர்கள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு, மறக்கமுடியாத சில நிகழ்வுகள் ஏற்படலாம்.

**கும்பம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று நடைபெறலாம், மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், கடன் சுமை குறைய புதிய வழியை கையாள்வீர்கள்.

**மீனம்** வருமானம் பெருக புதிய வழியை கையாள்வீர்கள், நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று கைகூடி வரலாம், மக்கட் செல்வர்களால் மகிழ்ச்சி கூடும்நாள் , பாராட்டும் புகழும் கூடும்.

வளவன்

# மந்துவில் மேற்கில் வாழைகளுக்கு குருத்தடைப்பு நோய்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மந்துவில் மேற்கு பகுதியில் உள்ள வாழைத் தோட்டங்களில் வாழைகளுக்கான குருத்தடைப்பு நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாய திணைக்களத்திற்கு அறிவித்ததை தொடர்ந்து சாவகச்சேரி கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர் விஜயகுமார் மந்துவில் மேற்கு விவசாய சம்மேளன செயலாளர் சகிதம் கூடுதலாக பாதிக்கப்பட்ட தோட்டத்தை சென்று பார்வையிட்டனர்.

பாதிக்கப்பட்ட வாழைகளை அழித்து மாற்று பயிர்ச்செய்கை ஆரம்பிக்குமாறும் அதற்கு விவசாய திணக்களத்தின் ஊடாக உதவிகள் செய்து தரப்படும் எனவும் உறுதியளித்தனர்.

(அ-3-29)

# திருக்குறள், தமிழ் இலக்கியம், கலைத்திறன் போட்டிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்குறள், தமிழ் இலக்கியம், கலைத்திறன் போட்டிகள் நடைபெறவுள்ளதாக மேற்படி சங்கத்தின் பொதுச் செயலர் வே.இறைபிள்ளை அறிவித்துள்ளார்.

இதற்கமைய திருக்குறள், தமிழ் இலக்கியத்திறன் தேர்வு எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வேண்டுகைகளை அனுப்பிய பாடசாலை மண்டபங்களிலும் கண்டாவளைக் கோட்டத்திற்கான நாவன்மைப் போட்டிகள் முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியில் 10 ஆம் திகதி வியாழக்கிழமை ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

கரைச்சி கோட்டத்திற்கான நாவன்மைப் போட்டிகள் கிளி/மத்திய கல்லூரியில் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் மாவட்ட நிலை நாவன்மைப் போட்டி, கலைத்திறன் போட்டிகள் (இசை, ஆடல், நாடகப் போட்டிகள்) கிளி/மத்திய கல்லூரியில் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் நடைபெறவுள்ளன.

மேலும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள எழுத்துத் தேர்விற்கான நுழைவு அட்டைகள் வேண்டுகையை அனுப்பிய பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இந்நுழைவு அட்டைகள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளை உடன் தொடர்பு கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது.

(அ-9)

# கிறிஸ்து உயிர்ப்பு விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்து உயிர்ப்பு விளையாட்டு விழா-2012 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு ஏ.யூட் நிக்சன் தலைமையில் யூலனூர் புனித கென்றியரசர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் மக்கள் வங்கி முகாமையாளர் ஏ.சதீஸ், சிறப்பு விருந்தினர்களாக யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் எஸ்.வேலழகன், அச்செழு ஜே/279 பிரிவு கிராம சேவையாளர் எஸ்.தயாபரன், நீர்வேலி ப.நோ.கூ.சங்க கணக்காளர் எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ-9)

# வாரம் ஒரு தகவல்

## இரவல் பேனா!

"சேர்! ஒரு நிமிடம்... உங்களுடைய பேனாவை சிறிது நேரம் தருகிறீர்களா?"

"ஆம்... பிடியுங்கள்!"

"என்ன சேர் இது...? மூடியைக் கழற்றிவிட்டு பேனாவை மட்டும் கொடுக்கிறீர்கள்?"

"அது எனது பழக்கம் சேர்!"

"ஜப்பானிலே ஒரு புதுவிதமான பேனா விற்பனைக்கு வந்துள்ளதாம். அது தொடர்பாக கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"இல்லையே!"

"அது எப்படி என்றால்... பேனாவின் மேல் பக்கத்திலே வட்டமான அளவிலே சின்ன மின் விசிறி... அது பற்றரியாலே இயங்கும்!"

"எதற்கு அது?"

"எழுதிக் கொண்டிருக்கும்போது அந்த மின்விசிறி சுழலும்! சிகரெட் புகையை விரட்டி அடித்து விடும்...! புகையில்லாத காற்றை நாம் சுவாசிக்கலாம்!"

"அதாவது... பக்கத்திலே இருக்கிறவர்கள் சிகரெட் பிடித்தாலும் அந்தப் புகை எங்களுடைய முகத்திற்கு நேராக வராமல் இது தடுக்கிறது"

"ஆமாம்!"

"எங்களுடைய ஊருக்கு இது மிகவும் அவசியமானது சேர்! ஏனென்றால் மற்றவர்களைப் பற்றியே கவலைப்படாமல் புகை பிடிப்பவர்கள் தான் இங்கே அதிகமாக உள்ளனர்"

"அது மட்டுமல்ல சேர்! பேனாவை இரவல் வாங்கினால் அதை அப்படியே எடுத்துக்கொண்டு போய்விடுபவர்கள்தான் அதிகம்! அதனாலே நான் எப்பொழுதும் முன் ஜாக்கிரதையாக மூடியைக் கழற்றி விட்டு பேனாவை மட்டும்தான் மற்றவர்களுக்குக் கொடுப்பேன்! அதனாலே என்ன ஆகிவிட்டது தெரியுமா?"

"என்ன ஆகிவிட்டது?"

"இதுவரைக்கும் 234 பேனா மூடிகள் என்னிடம் சேர்ந்து விட்டன!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 70 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 85 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 30 | 40 | 40 | 50 |
| தக்காளி | 70 | 60 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 | 20 |
| கரட் | 35 | 40 | 40 | 50-60 |
| பூசணி | 20 | 20 | 25 | 30 |
| புடோல் | 35 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-50 | 80 | 40-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 65 | 90 | 80 |
| பாகற்காய் | 90 | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 50 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 90 |
| பீற்றூட் | -- | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 40 | 40 | 30 | 40 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 400 | 320 |
| போஞ்சி | 40 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 10-20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 80 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 | 20-25 |

# யாழில் பெய்து வரும் மழையால் மீண்டும் டெங்கு பரவும் ஆபத்து

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய்க் கட்டுப்பாடு தொடர்பில் தத்தமது பங்கினை உணர்ந்து டெங்குக் கட்டுப்பாடு ஜனாதிபதி செயலணிக் குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக செயற்பட்டு யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள டெங்கு நோய்ப் பரம்பலையும் அநியாயமான இறப்புக்களையும் தவிர்க்க ஒத்துழைக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

யாழ். குடாநாட்டில் தற்போது மழை பெய்வதைத் தொடர்ந்து டெங்கு நோய் பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. டெங்கு நோய் பரவிய வேளையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் மக்களின் ஒத்துழைப்புடன் டெங்கு நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தற்பொழுது மீண்டும் டெங்கு நோய் பரவுகின்ற சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக,

1.தற்போது ஆரம்பித்துள்ள மழை

2.தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகை

3.டெங்கு நோய் குறைவடைந்ததால் மக்களிடையே தோன்றியுள்ள விழிப்புணர்வின்மை

4.டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் சூழலுக்கான இசைவாக்கம்

5.டெங்கு நோயின் தனித்துவமான பரவுகின்ற மற்றும் ஆபத்தை விளைவிக்கும் தன்மை

6.முன்னேற்றமடைய வேண்டியுள்ள நகர்புறங்களிலுள்ள கழிவுப் பொருள், கழிவு நீர் சேகரிப்பு மற்றும் இறுதியகற்றல் முகாமைத்துவம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பாடசாலைகளின் விடுமுறை காலம் மற்றும் எமது பிரதேச ஆலயங்களின் உற்சவ காலத்துடன் டெங்கு நோய் அதிகமாகவுள்ள தென்பகுதியிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் யாழ். குடா நாட்டுக்கு வருகை தந்ததனாலும் எமது பிரதேசத்திலிருந்து பலரும் தென்பகுதிகளுக்கு அடிக்கடி சென்று வருவதனாலும் அத்துடன் எமது பகுதியில் டெங்குநோய் பரப்பக்கூடிய நுளம்புகளின் செறிவு அதிகரித்துக் காணப்படுவதாலும் டெங்கு நோயின் பரவல் தற்போது அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்து காணப்பட்டதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிலை குறைவடைந்துள்ளது.

டெங்கு நோயானது 4 வகையரன டெங்கு வைரஸ் கிருமிகளால் ஏற்படுத்தப்படுகிறது. இவற்றில் ஒரு வகையான கிருமியால் நோய்க்குள்ளான ஒருவருக்கு மீண்டும் வேறு வகையான கிருமி தொற்றுமானால் மிக மோசமான பாதிப்பையாழ். குடாநாட்டில் கடந்த வருடத்தை போல் மீண்டும் ஒரு டெங்கு பரம்பல் ஏற்படுமானால் அதிக இறப்புக்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

எமது பிரதேசங்களின் சந்தை பிரதேசங்கள், நகர்ப்பிரதேசங்கள், நெருக்கமான குடியிருப்பு பிரதேசங்கள், பிளாஸ்டிக், பொலித்தீன் மீள்சுழற்சிக்கான பொருட்கள் மற்றும் குடிமனை கழிவுப்பொருட்கள் கிரம மாக அகற்றப்படுவதிலும் இறுதியகற்றலிலும் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன.

அத்து டன் கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் மழை நீர் வடிகால்களும் திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இவ்வாறான நிலைமைகள் டெங்கு நோய் பரவல் ஏற்படுகின்ற காலப்பகுதிகளில் எப்போதுமே எமக்கு அச்சுறுத்தலாகவே இருந்து வந்திருக்கின்றன. எனவே இவை தொடர்பில் எடுக்கப்படுகின்ற காத்திரமான முன்னேற்ற செயற்றிட்டங்கள் நீண்ட கால நோக்கில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் பயனுறுதியுடையவையாக அமையும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# விமானத்தை சுட்டு வீழ்த்திய விவகாரம்; சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(அநுராதபுரம்)

மதவாச்சி இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான அன்டனோவ்- 32 ரக விமானத்தை வில்பத்து காட்டுப் பகுதியில் வைத்து ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டு வீழ்த்தியதில் விமானி உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட பாதுகாப்பு படைவீரர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த இருவரையும் எதிர்வரும் 07 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் ருவன்திகா மாரப்பன உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்களாவர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளின் அறிக்கைகளை எதிர்வரும் தினத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதவான் இரகசியப் பொலிஸாருக்கு மேலும் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# அரசாங்க நிர்வாக நடைமுறைகளுக்கு மாறாக புதிய தொண்டர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.குற்றச்சாட்டு





(வவுனியா)

சர்வதேச தொழிலாளர் தினமான மே தினத்திலாவது வவுனியா மாவட்டத்தில் நீண்ட காலமாக கடமையாற்றிவரும் பெண் சுகாதார தொண்டர்களின் உரிமைகளை காக்கும் முகமாக நிரந்தர நியமனத்தை வழங்கி அவர்களது உரிமைகளை காப்பாற்றுமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்டத்தில் 1995 ஆம் ஆண்டு முதல் சுகாதாரத் தொண்டர் ஊழியர்களாக நூற்றுக்கணக்கான வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இளம் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு மாவட்ட சுகாதாரப் பணிகளை ஆங்காங்கே உள்ள நடமாடும் மற்றும் கிராமிய மருத்துவ மையங்களிலும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, வவுனியா பொதுமருத்துவமனை ஆகிய இடங்களில் மிகவும் கடின நிலைமையின் கீழ் மேற்கொண்டு வந்துள்ளனர்.

இவர்கள் 2001, 2004, 2008, 2010 ஆம் ஆண்டுகளில் நேர்முகத் தேர்வுக்குட்பட்டு நிரந்தரப் பணி வழங்கப்படுவர் என்று உத்தரவாதமளிக்கப்பட்டு அந்நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வூழியர்கள் உணவுப் பொதியை மட்டும் பெற்றுக் கொண்டு சம்பளமாக எதனையும் பெறாமல் தம்மை வருத்தி பணியாற்றி வந்தனர். வருகின்ற மே 31 அன்று இவர்களது ஒப்பந்தம் காலாவதியாகின்றது.

சில அரசியல் தலையீடுகளின் அடிப்படையில் அவ்வப்போது அரசாங்க நிர்வாக விதிமுறைகளுக்குப் புறம்பாக இடம்பெறும் தெரிவுகளில் புதிய நபர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். இதனைப் போன்றே நேற்றைய தினம் ஜி.எப்.ஏ.டி.டிம். திட்டத்தின் கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட புதிய நபர்கள் மேற்படி பணிக்கு நியமனம் பெற்றனர்.

சர்வதேச தொழிலாளர் தினமான மே தினத்திலாவது ஏற்கனவே கடமையாற்றி வரும் பெண் ஊழியர்களின் உரிமையைப் பாதுகாக்கு முகமாக அவர்களுக்கு நிரந்தர நியமனம் கொடுக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே பதினேழு வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றும் சிலர் திருமணம் முடிக்காமலும் பெரும்பாலோர் திருமணம் முடிப்பதைத் தவிர்த்தும் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் ஏக்கத்துடன் பணியாற்றி வரும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்கும் நடவடிக்கையினை உடன் மேற்கொண்டு புதியவர்களை உள்வாங்கும் திட்டத்தினைக் கைவிட வேண்டும்.

இவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் பலர் மனவுளைச்சலுக்குள்ளாகி தற்கொலை செய்யும் அளவுக்கு அரசாங்கம் தோற்றுவித்துள்ளது.

எனவே, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீதி வழங்கக்கோரி வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட சகல அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதியிருப்பதாக சிவசக்தி ஆனந்தன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-2)

# ESOFT Computer Studies [Pvt] Ltd.

www.esoft.lk

ESOFT
The Leader in Professional ICT Education

- DiTEC Diploma in Information Technology
- DiCA Diploma in Computerized Accounting
- DiBM Diploma in Business Management
- DiSE Diploma in Software Engineering
- DiWE Diploma in Web Engineering
- DiE Diploma in English

- HDIT Higher Diploma in Information Technology
- edexcel HND — HND In Computing & Systems Development
- bucks new university
- bcs The Chartered Institute for IT — Higher Education Qualification (HEQ)
- BIT — Bachelor of Information Technology (UCSC)
- BIT@UoM — Bachelor of Information Technology (External)

Offer at...
25% Discount for
25% OFF
25 Courses

Huawei S7 Tap
For all HND & HDIT Registrations



FREE

*Conditions Apply



@ Special Offer!

**Nelliady**
151, Jaffna Road, Nelliady
Tel: 021 226 4940

**Kilinochchi**
01,Kanagapuram Road, Kilinochchi
Tel: 077 3099308

ESOFT Computer Studies [Pvt] Ltd
17/1,Brown Road,Jaffna.
Hotline:077 3099308 Tel:021 222 4142
Email:jaffna@esoft.lk
Web:www.esoft.lk

(SC/5965)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

பள்ளிக்குடா பூநகரியினைச் சேர்ந்த நபரொருவர் 2 ஆயிரத்து 786 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ். நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபர் குருநகர்ப்பகுதியில் கஞ்சாவினை வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் மா. கணேசராஜா குறித்த நபருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதத் தொகையாக விதித்தார்.

அபராதத் தொகையின் மூன்றிலொரு பங்கு பொலிஸாருக்கு வெகுமதியாக அளிக்கப்படல் வேண்டும். (அ-2-4)

# சுயாதீன விசாரணை இணையத்தள மனுவில் கையொப்பம் இடுங்கள்

## பிரித்தானிய தமிழர் பேரவை அழைப்பு

**மத்திய லண்டனில் இடம்பெறவுள்ள சர்வதேச தொழிலாளர் தின ஊர்வலத்தில் அனைத்து தமிழ்மக்களும் கலந்துகொண்டு ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பை பிரித்தானிய வாழ் அனைத்து இன சமூக மக்களுக்கும் எடுத்துச் சொல்வோம் என பிரித்தானிய தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

தமிழினம் ஓர் தனித்துவமான இறையாண்மை உள்ள இனம் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கும் பிரித்தானிய நாடாளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச சுயாதீன விசாரணை தொடர்பான இணையத்தள மனுவில் கையொப்பங்கள் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் பிரித்தானிய தமிழர் பேரவை மேற்கொண்டுள்ளது.

இப்பேரணியில் அனைத்து தமிழ் மக்களையும் அணி திரண்டு வருமாறு கேட்டுக் கொள்வதோடு இணைய தள மனுவில் கையமுத்து பெறுவதற்கு உதவ விரும்புவோர் முற்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறும் கொண்டு செல்லும் இணையத்தள வசதிகள் உள்ள மடிக்கணனி உள்ளவர்கள் இவ் இணைய வழி கையொப்பமிடல்களுக்கு உதவுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என பிரித்தானியத் தமிழர் பேரவையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நாளை மறுதினம் காலை 10.30 மணிக்கு கிளாக்கின் வேல் கிறீன் இல் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஐ.தே.க.வின் மேதினம் யாழ்ப்பாணத்தில்

## செயற்குழு தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு ஏகமானதாக தீர்மானத்தை எடுத்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேதினத்தன்று அனைத்து தொகுதி அமைப்பாளர்களையும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருமாறு கட்சி அறிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் தனது மே தினத்தை கொண்டாடுவது குறித்து சர்வதேசமும் தனது கவனத்தை திருப்பியுள்ளது.

யாழ்ப்பாணம் பல வருடங்களாக அரசியல் நீரோட்டத்தில் இருந்து விலகி இருக்கின்றது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த ஜனநாயக செயற்பாட்டை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார். (அ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# மே மாதம் 18 ஆம் திகதி யுத்தவெற்றிக்கொண்டாட்டம்

யுத்த வெற்றி நினைவு நகழ்வுகள் பாரியளவில் நடத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்று தசாப்தகாலமாக நீடித்து வந்த யுத்தம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

எதிர்வரும் மாதத்தில் யுத்த வெற்றி நினைவு நிகழ்வுகள் சிறப்பான முறையில் நடத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. எதிர்வரும் மாதத்தை படை வீரர்கள் மாதமாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

யுத்த வீரர்களை நினைவுகூரும் வகையில் விசேட கொடியொன்றும் உருவாக்கப்பட்டவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. முதலாவது படைவீரர் கொடி ஜனாதிபதியிடம் வழங்கப்படவுள்ளது.

மே மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பாரியளவில் யுத்த வெற்றிக்கொண்டாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் நினைவு கூரும் நிகழ்வுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ-2)

# விபுலானந்த நிதியத்தை இயங்கவைக்க கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட விபுலாநந்தா நிதியத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா தெற்கு வலய அதிபர்கள் வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ். என். சார்ள்ஸ் அவர்களிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற வவுனியா தெற்கு வலய பாடசாலை கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி வறுமை காரணமாக உயர்கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது.

ஆயினும் இந்நிதியம் பல இலட்சம் ரூபா நிதியுடன் இயங்காமல் இருப்பதனால் இந்நிதியத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா தெற்கு வலய அதிபர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-266)

# கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் 70ஆம் ஆண்டு நிறைவு விழா

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் 70 ஆம் ஆண்டு நிறைவு எழுச்சி விழா நேற்றும் இன்றும் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறுகின்றன.

இந்நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்வுகள் காலை 9 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் எஸ். சிவலிங்கராஜாவின் சிறப்புச் சொற்பொழிவு, இந்தியா திருப்பதி ஆந்திரா, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலைக்குழுவின் கலை நிகழ்ச்சி என்பன நடைபெறும்.

அன்றையதினம் மாலைநிகழ்வுகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் தமிழ் நாடு முத்தமிழ் வித்தகர் கோ. சாரங்கபாணியின் சிறப்புச் சொற்பொழிவு, ஸ்ரீ வெங்க டேஸ்வரா கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி, கலாநிதி செல்வி திருச்சந்திரன், பேராசிரியர் சோ.சந்திரசேகரம், கலாபூஷணம் செல்வி சற்சொரூபவதிநாதன், சி. கந்தசாமி, சோ. பரமசாமி ஆகியோருக்கு சங்கச்சான்றோர் விருது வழங்கலும் நடைபெறவுள்ளதாக கொழும்பு தமிழ்ச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி பற்றிய ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி சவால்கள் மற்றும் பின்னடைவு நிலைபற்றி ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் சமகாலத்தில் காணப்படும் ஆசிரிய வளப்பற்றாக்குறை, கல்வி நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றத்துக்குரிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

போர்க்காலத்தையும் விட போருக்கு பிந்திய காலத்தில் வள அதிகரிப்பு செய்யப்பட்டிருந்தும் கல்வி நிலையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான காரணங்களை இனங்காணும் விதமாக பல்வேறு கருத்துக்கள் இதன்போது முன்வைக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து ஆசிரிய வளம் மற்றும் பௌதீக வளங்களை உரிய முறையில் பெற்றுக்கொள்ளவும் அவற்றைப் பகிர்ந்தளிக்கவும் சமூக ரீதியாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆசிரிய இடமாற்றம் மற்றும் ஆசிரிய உறவைச் சீராக்குதல் போன்ற விடயங்களைப் பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது. (அ-2)

## மே 7 இல் விடுமுறை

(கொழும்பு)

வெசாக் தினத்தை முன்னிட்டு மே மாதம் 7 ஆம் திகதி அரசினால் வழங்கப்பட்டிருக்கும் விடுமுறையை ஆசிரியர்களுக்கும் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசினால் அறிவிக்கப்பட்ட விசேட விடுமுறை தினம் ஆசிரியர்களுக்கும் உரியதாகும் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். இது தொடர்பில பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் வழங்கப்படும் என்வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

**MMBL**
**Money Master**
Company Registration No.P.V 986

**கோபி ஏஜென்சி புதுக்குடியிருப்பில் உதயம்...**

**WESTERN UNION**
மணி டிரான்ஸ்பர்

வேகமாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும்

வெஸ்டர்ன் யூனியன் மூலம் உலகெங்கும் இருந்து அனுப்பும் பணத்தினை ஒரு சில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில் பெற்றுக்கொள்ளலாம்

வெஸ்டர்ன் யூனியனால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது புதுக்குடியிருப்பு மற்றும் அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!

- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிமாற்றம் சேவையினை வழங்கி வருகின்றோம்.
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்.
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினை பெற்று வீடு செல்லலாம்.
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)

# கோபி ஏஜென்சி
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி, புதுக்குடியிருப்பு




நம்பிக்கை!
நாணயம்!
பாதுகாப்பு!

WESTERN UNION
MONEY TRANSFER

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:—0243248979, 0777343300

அலுவலக நேரம்: திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை

தலைமைக்காரியாலயம்:
# கோபி ஏஜென்சி
33,மில் வீதி, வவுனியா.024 2225888/024 2222411

WESTERN UNION

வெஸ்டர்ன் யூனியனின் பிரதான முகவர் MMBL மணி டிரான்ஸ்பர் பிறைவேட் லிமிட்டட் 7 ஆம் மாடி, எய்ட்கென் ஸ்பென்ஸ் டவர்-II
இல.315,வொக்சோல் வீதி,கொழும்பு-02. உடனடி அழைப்பிற்கு-0115529999

(SC-5964)




# சிறந்த கலைஞன்



ரகுவரபுரியை ஆண்டு வந்த மன்னர் சசிகாந்தர் சிறந்த கலை ரசிகர்! அதிலும் சிற்பக்கலையை அவர் மிகவும் ரசித்தார். ஒருமுறை, கோடைகாலத்தில் வசிப்பதற்கேற்ற வசந்த மாளிகை ஒன்று செய்ய அவர் திட்டமிட்டு, அதற்காக நதிக்கரையில் ஒரு அழகான

## அம்புலி மாமா கதைகள்

மாளிகையை உருவாக்கும் பணியைத் தொடங்கினார். சந்திரபவனம் என்று பெயரிடப்பட்ட அந்த வசந்த மாளிகையின் கட்டட வேலைகள் முடிவடைந்தன. மாளிகையின் உட்புறம் நேர்த்தியான மர வேலைப்பாடுகளை செய்விக்க எண்ணிய மன்னர் அதற்காகத் தச்சுக்கலையில் சிறந்த கலைஞன் ஒருவனைத் தேடும் பொறுப்பை தன் மந்திரியிடம் ஒப்படைத்தார்.

அத்தகைய சிறந்த கலைஞனை வலைவீசித் தேடிய மந்திரி இறுதியில் தச்சுக் கலையில் சிறந்தவனான குண்டலகேசியைத் தேர்ந்தெடுத்தார். அவரை அரண்மனைக்கு வரவழைத்து, சந்திரபவன மாளிகையின் உட்புறத்து தச்சுவேலைப் பணியை அவரிடம் ஒப்படைக்க விரும்புவதாகக் கூறினார். அதற்கு குண்டலகேசி, ''மந்திரி அவர்களே! இந்த மகத்தான பணியை என்னிடம் ஒப்படைக்க விரும்புவது குறித்து மகிழ்ச்சி! ஆனால், நான் மிகவும் வயதானவன்! என்னால் முன்போல, தச்சுத் தொழிலை சிறப்பாக செய்ய முடிவ



தில்லை. அதனால் என்னால் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியாது!''என்றார்.

''அப்படியானால், உங்களுக்குத் தெரிந்த சிறந்த கலைஞன் வேறு யாரையாவது சிபாரிசு செய்ய முடியுமா?'' என்று மந்திரி கேட்டார்.

''மதிவாணன், குணசீலன், ஜெயபதி என்று என்னுடைய மூன்று மகன்களும் என்னை விட சிறந்த கலைஞர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் சிறந்தவன்! இந்த மூவரில் யாரையாவது ஒருவனைத் தேர்ந்து எடுத்து அவனிடம் பொறுப்பை ஒப்படையுங்கள். மூவரில் யாரை



நீங்கள் தேர்ந்தெடுத்தாலும் மற்றவர்கள் அவன் மீது பொறாமைப்படமாட்டார்கள்!''என்றான்.

''அப்படியானால் மூவரையும் நாளைக்கு என்னைச் சந்திக்க ஏற்பாடு செய்!''என்று சொல்லி மந்திரி அவனை அனுப்பிவிட்டார். மறுநாள் மூன்று சகோதரர்களும் மந்திரியை சந்திக்க, அவர் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சந்திரபவனத்தின் உட்புறத் தச்சுவேலைகளைப் பற்றி அவர்களிடம் விளக்கிய பின் மூவரையும் அவர்களாலேயே செய்யப்பட்ட பொருட்களை எடுத்துவரச் சொன்னார்.

அவ்வாறே மறுநாள் மூவரும் பொருட்களை எடுத்து வந்து மந்திரியை சந்தித்தனர். மதிவாணன் முக்காலி ஒன்றைக் காட்ட, குணசீலன் நாற்காலி ஒன்றைக் காண்பித்தான். ஜெயபதி ஒரு பெட்டியை எடுத்து வந்திருந்தான். கலை நயத்தோடு செய்யப்பட்டிருந்த குணசீலன் செய்த நாற்காலி மந்திரியை மிகவும் கவர்ந்தது. அவனே சந்திர பவனை அலங்கரிக்கும் பணிக்குத் தகுந்தவன் என்று மந்திரி தீர்மானித்தார்.

மன்னரை அந்த மூன்று பொருட்களையும் பார்வையிட அழைத்தார். மூன்றையும் உற்று நோக்கிய பின் மன்னர், மூன்றுமே வெவ்வேறு பொருட்களாக இருப்பதால் எது சிறந்தது என்று முடிவெடுப்பது கடினமாக உள்ளது. அதனால், அவர்கள் மூவருக்கும் அவகாசம் அளித்து, மூவரையும் கட்டில் செய்து கொண்டு வருமாறு சொல்லும்படியாக மந்திரிக்கு உத்தரவு இட்டார். அவ்வாறே, மந்திரியும் மன்னரின் விருப்பத்தை அவர்களிடம் கூறி, அவர்களுக்கு நான்கு நாட்கள் அவகாசமும் அளித்தார். மூவரும் தங்கள் வீடு நோக்கிச் சென்று தனித்தனியே கட்டில் தயாரிக்க இரவு பகலாய் முனைந்தனர். பொதுவாக அரச குடும்பத்தினர் பயன்படுத்தும் கட்டில் ஒன்றை மதிவாணன் மிக அழகாகத் தயாரித்தான்.

அதே மாதிரிக் கட்டிலை கலை நயத்தோடு மேலும் சிறப்பாகத்தோன்றும்படி குணசீலன் தயாரித்தான். ஆனால் ஜெயபதியோ இருவரது பாணியிலிருந்து வேறுபட்டுப் புதுவிதமான கட்டில் ஒன்றைத் தன் கற்பனையில் உருவாக்கித் தயாரித்தான். பின்னர் மூவரும் ஒருநாள் தாங்கள் செய்த கட்டில்களின் மாதிரி வரைபடத்தை மந்திரிக்குக் காட்டினர். பின்னர் மன்னரே நேரில் மந்திரியுடன் வந்து மூன்று கட்டில்களையும் பார்வை இட்டார். உடனே மந்திரியிடம், ''நமது சந்திர பவனத் தச்சுவேலைப் பொறுப்பை ஜெயபதியிடம் ஒப்படையுங்கள்!'' என்றார். அதைக் கேட்ட மந்திரிக்குப் பெருத்த ஆச்சரியம் உண்டாகியது. அதைக் கண்ட மன்னர் தன் செயலுக்கு விளக்கம் தெரிவித்தார்.

''மதிவாணனும், குணசீலனும் சிறந்த கலைஞர்கள் என்பதை மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் செய்திருப்பது போல் கட்டில்களை நான் ஏற்கனவே அரண்மனையில் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய வேலைப்பாடும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. ஜெயபதி செய்துள்ள கட்டிலில் அத்தகைய வேலைப்பாடு சிறப்பாக அமையவில்லை. ஆனால் அவனுடைய வடிவமைப்பு இதுவரை நான் பார்க்காத புதுமையாக உள்ளது. நீங்கள் அதை ஒப்புக் கொள்கிறீர்களா?''என்று மன்னர் கேட்க, மந்திரி ''ஆம்!'' என்று தலையாட்டினார்.

''சந்திரபவனத்தில் செய்யப் போகும் தச்சு வேலைப்பாடுகள் இதுவரை யாரும் எங்கும் பார்த்திராத வண்ணம் புதுமையான கற்பனைத் திறனோடு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆகவே, ஜெயபதிக்கு புதிய தச்சு வேலைகளுக்கு வடிவமைக்கும் பொறுப்பைக் கொடுங்கள். ஆனால் அவற்றைத் தயாரிக்கும் பொறுப்பை, மற்ற இரு சகோதரர்களிடம் கொடுங்கள். இவ்வாறு செய்தால், புதுமையான கற்பனைகள், கலைநயத்தோடும், சிறந்த வேலைப்பாடுடனும் சேர்ந்து மிக அற்புதமாக அமையும்!'' என்றார்.

மன்னரின் புத்திக் கூர்மையை உணர்ந்த மந்திரி அவரை மனமாரப் பாராட்டினார்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 115


ஜேர்மனி பின்வாங்கத் தொடங்கியபோது விடுதலை இராணுவவீரரைத்தூக்கி கொண்டாடும் பல்கேரியர்

புளொயேஷ்தி எண்ணெய் பிரதேசத்தை இழந்ததானது பாசிச ஜேர்மனியின் பொருளாதாரத்தின் மீது பெரும் அடியாக விழுந்தது. இப்போது ஹிட்லர் படைகள் தனது சொந்த செயற்கை எரிபொருள் உற்பத்தியை மட்டுமே-குறைவான அளவு ஜேர்மனிய, ஹங்கேரிய எண்ணெய் இருப்புகளைத் தவிர்த்து-நம்பியிருக்க வேண்டியிருந்தது. ஆனால், செயற்கை எரிபொருளைக் கொண்டு ஜேர்மனிய இராணுவத்தின் எரி பொருள் தேவையை ஈடுகட்டுவது மிகக் கடினமாக இருந்தது.

ஆகஸ்டு 31 ஆம் திகதி சோவியத் இராணுவம் ருமேனியாவின் தலைநகரமாகிய புகாரேஸ்டினுள் நுழைந்தது. ருமெனிய தலைநகர மக்கள் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டனர். தம்மை விடுவித்த சோவியத் போர்வீரர்களை அவர்கள் உற்சாகத்தோடு வரவேற்றனர். செஞ்சேனை வாழ்க என்ற வாழ்த்து முழக்கம் எங்கும் ஒலித்தது. சோவியத் போர்வீரர்களின் மீது மலர்மழை பொழிந்தனர். பலத்த கரஒலி எழுப்பி வாழ்த்தினர்.


ருமேனிய மக்களுடைய பாதுகாப்பின் ஆதாரத்தையும் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களை ருமேனியாவிலிருந்து விரட்டியடிக்க வல்ல உண்மையான சக்தியையும் புகாரேஸ்டு வாசிகள் சோவியத் துருப்புகளின் மகத்தான வெற்றியில் கண்டனர்.

புகாரேஸ்டை விடுவித்த பின் 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் யுக்கோஸ்லாவிய எல்லையை நோக்கி தூர்னு-சேவெரின் திசையிலும் வடமேற்கே ருமேனிய-ஹங்கேரிய எல்லையிலிருந்து ட்ரான்சில்வானியாவை நோக்கியும் முன்னேறிச் சென்றன.

எதிரி பலத்த எதிர்ப்பைக் காட்டினான். ஆனால், சோவியத் துருப்புகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த இயலவில்லை.

ருமேனிய நாட்டின் பெரும் பகுதியை பாசிச ஜேர்மனியத் துருப்புகளிடமிருந்து விடுவித்த 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் செப்ரெம்பர் 27 இல் ருமேனிய -ஹங்கேரிய எல்லையையும் ருமேனிய-யுக்கோஸ்லாவிய எல்லையையும் அடைந்தன.

ஒக்ரோபர் இறுதியில் சோவியத் துருப்புகள் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களை ருமேனியாவிலிருந்து முற்றிலுமாக விரட்டியடித்தன. இதற்கு பெரும்முயற்சிகள் தேவைப்பட்டன; ஏராளமான இரத்தம் சிந்தப்பட்டது. 1944 மார்ச் முதல் அக்ரோபர் வரை ருமேனியாவை விடுவிப்பதற்காக நடந்த சண்டைகளில் சோவியத் இராணுவம் 2 இலட்சத்து 86 ஆயிரத்துக்கும் அதிகமானோரை இழந்தது. இவர்களில் 69 ஆயிரம்பேர்கள் கொல்லப்பட்டனர். ஆகஸ்ட் 23 முதல் அக்ரோபர் 30 வரை பாசிஸ்டுகளுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் 58 ஆயிரத்து 300 பேர்களுக்கும் அதிகமான ருமேனியப் போர்வீரர்கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், தொலைந்து போயினர்.


பல்கேரியாவின் சோபியாவில்விமானக்குண்டுத்தாக்குதல்

"சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் மிகப்பெரும் வீரத்தை வெளிப்படுத்தி, ஏராளமான இழப்புகளை விலையாகச் செலுத்தி, யுத்தத்தின் முக்கிய சுமையை தோள்களில் தாங்கி, பாசிச ஜேர்மனியை முறியடிப்பதில் தீர்மானகரமான பங்காற்றி, ருமேனியாவையும் இன்னும் பிற நாடுகளையும் மக்களையும் ஹிட்லரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க விலைமதிப்பற்ற உதவி நல்கிய சோவியத் மக்களின்பாலும் இவர்களுடைய புகழ்மிகு இராணுவத்தின்பாலும் ருமேனிய மக்கள் ஆழ்ந்த நன்றி பாராட்டுகின்றனர்" என்று பாசிசத்தின்மீது அடையப்பட்ட வெற்றியின் 30 ஆண்டு நிறைவை ஒட்டி ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டியும் ருமேனிய அரசாங்கமும் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

### பல்கேரியாவின் விடுதலை

3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் கேலேராஷ் நகர (துனாய் ஆற்றின் கரையில்) பிரதேசத்தில் பின்வாங்கிச் சென்று கொண்டிருந்த எதிரியைத் துரத்திச்சென்று 6 ஆயிரம் வரையான பாசிச ஜேர்மனியப் போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறைப்பிடித்தன. இவர்களில் பெரும்பாலானோர் புகாரேஸ்டைத் தாக்குவதற்காக பல்கேரியாவிலிருந்து ருமேனியாவிற்குள் அனுப்பப்பட்டவர்கள். இதற்கப்பின் இத்துருப்புகள் தப்ருஜா வழியே சென்று எஞ்சியிருந்த ஹிட்லர் துருப்புகளை நொருக்கித்தள்ளின. தப்ருஜா மக்கள் சோவியத் போர்வீரர்களை பெரும் மகிழ்வோடு வரவேற்றனர். செஞ்சேனையின் வெற்றிச் செய்திகளால் உள்ளூர் பத்திரிகைகள் நிரம்பி வழிந்தன.


ஹிட்லர் துருப்புகளை முறியடித்து சோவியத் இராணுவம் 1944 கோடை இறுதியில் பல்கேரிய எல்லகளை நெருங்கிய போது நாட்டில் தேசியவிடுதலை இயக்கம் தனது வளர்ச்சிக் கட்டத்தில் தீர்மானகரமான கட்டத்தை அடைந்திருந்தது. இத்தருணத்தில் நாட்டில் தாய்நாட்டு முன்னணி கமிட்டிகளின் எண்ணிக்கை பெரிதும் கூடுதலாகி ஆகஸ்டு இறுதியில் இது, 670 ஆக இருந்தது. எல்லா இடங்களிலும் மக்கள் பல்கேரிய கம்யூனிஸ்ட்டு கட்சியின் அறை கூவலுக்கு செவிமடுத்து ஆயுதங்களை ஏந்தினர். பல இடங்களில் பொலீசுடனும் துருப்புகளுடனும் ஆயுத மோதல்கள் நடைபெற்றன. அரசாங்கத் துருப்புகளில் பல போர்வீரர்கள் பாசிச படைத்தலைமைக்கு கீழ்ப்படிய மறுத்தனர். பல சமயங்களில் முழு படைப்பிரிவுகளே கெரில்லாப் படைவீரர்களின் தரப்பிற்கு மாறின. பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களை நாட்டை விட்டுத் துரத்தவல்ல ஒரே சக்தியான சோவியத் இராணுவத்தின் வருகையை பல்கேரிய மக்கள் ஆவலோடு எதிர்நோக்கினர்.

ஜேர்மனியப் போர்வீரர்களின் கல்லறை




(தொடரும்)

# அன்பை கொண்டாடுதல்



## ஆன்மீகம் 41

"தான் செய்தது தவறு" என்றே தெரிந்து கொண்டுவிட்ட ஒரு நபரிடம், மீண்டும் அவருடய தவறைப் பற்றி பேசாதீர்கள்! அவரே அதைத் தவறு என்று தெரிந்து கொண்ட பிறகு, மீண்டும் அவரைக் குத்திக் காட்டுவது என்ன பயனைக் கொடுக்கும்? இவ்வாறு குத்திக்காட்டுவதால் தவறு செய்தவர் மேலும் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகிறார். தன் தவறை நியாயப்படுத்தப் பார்ப்பார். அல்லது ஆட்சேபிக்க அதாவது மறுதலிக்கப் பார்ப்பார். எனவே, ஒருவர் தான் செய்தது தவறு என்று தெரிந்து கொண்டபிறகு, உங்களுக்கு அதுபற்றித் தெரியவேண்டாம் என்று அவர்நினைத்து விட்டால் அப் பொழுது நீங்கள் அவரது தவறைப் பற்றி சுட்டிக்காட்ட முயல வேண்டாம். பெரும்பாலும், மக்களுக்குத் தான் செய்யும் தவறுகள் தெரிந்திருந்தும், மற்றவர் சுட்டிக்காட்டுவதை விரும்புவதில்லை!



தன்னுடைய தவறு பற்றிய விழிப் புணர்வே இல்லாதவர், மற்றவர் யாராவது தம்மை திருத்தி வழிநடத்த வேண்டும் என்று எதிர் பார்ப்பவர், இப்படிப்பட்டவர்களிடம் மட்டுமே நீங்கள் அவரது தவறுகளை சுட்டிக் காட்டக் கூடும். நீங்கள் அபிப்பிராயம் கூறுவதற்கு முன்பாக அது கேட்பவருக்குப் பயன் அளிக்குமா என்று யோசியுங்கள். தவறுகளைச் சுட்டிக் காட்டு வதற்கு முன்பு, உங்களுடைய அபிப்பிராயங்கள், சூழ்நிலையை முன்பைவிட இனிமையாக்குமா, அன்பைப் பேணிக்காக்குமா அல்லது ஒரு நல்ல இசைவை ஏற்படுத்துமா என்று பாருங்கள்! ஒரு பெரும்தன்மை உள்ள மனிதர், மற்றவர்கள் குற்ற உணர்வால் வருந்தும் வகையில் அவர்களுடைய குற்றங்களைச் சுட்டிக்காட்ட மாட்டார்கள். மாறாக வெறும் வார்த்தைகளால் குத்திக் காட்டாமல், அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே மேலோங்குமாறு, அன்போடும், அக்கறையோடும் இனிமையான முறையில் தவறுகளைத்திருத்தி விடுவார்கள்.

அடிக்கடி உங்கள் நேர்மையை எதிராளியிடம் நிலைநாட்ட முற்படும் பொழுது மற்றவர்களுடைய உணர்வுகளைப் பற்றிய கவலையின்றி, அந்தக்ககட்டத்தில் சற்று அறிவுக் கூர்மை இல்லாதது போல நடந்நது கொள்கிறீர்கள். ஒருவர் ஏற்கனவே நொந்திருக்கும் பொழுது உங்கள் நியாயத்தை நிலைநாட்ட முற்படுவதும் வீணாகும். அதற்குப்பதிலாக மிக இயல்பாக, சாதாரணமாக "இது குறித்து நான் வருந்துகிறேன்" என்று கூறுவதன் மூலமாக எதிராளியை அவருடைய நொந்துபோன நிலையிலிருந்து சற்று கைதூக்கிவிட முயற்சிக்கலாம். மேலும் அவருடைய மனக் கசப்பை நீக்கிவிடலாம். பல சந்தர்ப்ப சூழ் நிலைகளில் நியாயத்தை ஆணித் தரமாக வலியுறுத்தும் வகையில் பேசுவதைவிட "ஐ ஆம் சாரி" என்று கூறுவது இனிமையற்ற சூழலை மாற்றி சகஜமான சூழல் ஏற்பட ஏதுவாகிறது.

"சாரி வருந்துகிறேன்" என்ற இந்த ஒற்றை வார்த்தை மனமாரக் கூறப் படும் பொழுது அதுகோபம், குற்ற உணர்வு, விலகிச் செல்லும் இடைவெளி இவற்றை நீக்குகிறது.

மற்றவர்கள் *சாரி* சொன்னால், நிறையப்பேருக்கு அதைக் கேட்க நேரிடுவதில் ஒரு கர்வம் வந்து விடுகிறது. அது அவர்களுடைய *தான்* என்ற அகங்காரத்தை அதிகப்படுத்தி விடுகிறது. ஆனால், ஒருஞானஸ்தரிடம், அறிவாளியிடம் "சாரி நான் வருந்துகிறேன்" என்று கூறும் பொழுது, உங்களுடைய அறியாமையைக் கண்டு அவருடைய கருணை வெளிப்படுகிறது. ஆனால், உங்கள் குருவிடம் நீங்கள் "ஸாரி வருந்துகிறேன்" என்று சொன்னால் அவர்கோபமுற்று, "போ,போய் அஷ்டவக்ரா" வை காது கொடுத்துக் கவனித்துக்கேள் என் கிறார். உங்களுடைய மன்னிப் புக் கோருதல் நீங்கள் செய்ய வேண்டியதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. நீங்கள் செய்த தவறை உணருகிறீர்கள். தவறு என்பது சுயநினைவற்ற மனதின் ஒரு பகுதி ஆகும். சுயநினைவற்ற மனது சரியான செயலைச் செய்ய முடியாது அதேபோல் சுயநினைவோடு கூடிய நிலையில் தவறு செய்ய முடியாது. எனவே தவறு செய்யும் மனது, தவறுக்காக வருந்தும் மனது, வாய்விட்டு *ஸாரி* வருந்துகிறேன் என்று சொல்லும் மனது இம் மூன்றுமே முற்றிலும் வெவ்வேறான மனது அல்லவா? மன்னிப்பு கோரும் மனது சுயநினைவற்ற மனதாக இருக்க முடியாது. எனவே *மனமாற வருந்துகிறேன்* என்று சொல்வது ஒரு பெரிய தவறாகும்!

என்ன விநோதம்! உண்மை எப் பொழுதுமே ஒரு முரண்பட்ட தோற்ற முடையதாகவே இருக்கிறது!


(தொடரும்)

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

# உங்கள் கைரேகை பலன்கள் 41

## ரேகைகளும் கிரகங்களும்

ஆங்கில இரேகை சாஸ்திர நூல்களில் இருதய இரேகையின் உற்பத்தியைக் குருமேட்டில் ஸ்தாபித்திருக்கின்றனர். புத்தி இரேகை குருமேட்டில் உற்பத்தியாகிச் சற்று ஏறக்குறைய சந்திர மேட்டில் சென்றுள்ளதை கவனித்துப் பார்க்கில் இந்தச் சந்தேகம் நிவர்த்தியாகிவிடும். இரேகை உற்பத்தியில் நன்கு பதிந்தும், பிறகு படிப்படியாய் மெல்லியதாகியும், இறுதியில் உரோமக்கால் போலவும் அமைகிறது. இதேபோல் இருதய இரேகையின் உற்பத்தியையும் இறுதியையும் சற்றுக் கவனித்துப்பார்த்தால் உண்மை விளங்கும். இருதய இரேகையில் முக்கியமாய் நிறத்தைக் கவனிப்பதும் அவசியமாகும். நன்கு அமையப்பட்ட இருதய இரேகையில் வெண்மையான புள்ளி காணப்படின் திடகாத்திரமான தேகாரோக்கியமாகாது. இருதய இரேகையில் நிலைமையை இருகைகளி லும் பார்த்து, எவ்விதக் குறியாயினும் இரண்டிலும் இருக்கப்பெறின் அதற்கான பலன் உறுதிப்படும். வெண்புள்ளி திடமுள்ள இருதயத்தில் பலவீனம் காணப்படுவதைக் குறிக்கும்.




இது மாத்திரமமன்று பற்றுள்ள இடத்தில் மனம் தளர்வுறுவதையும் புலப்படுத்துவதாகும். சந்திரன், சனி, புதன் ஆதிக்கமுள்ளோருக்கு மாத்திரம் படிப்படியாக தளர்வையும் மற்றைச் செவ்வாய், சுக்கிரன், குரு ஆதிக்கமுள்ளோருக்கு கலங்காத தன்மையையும் காட்டும். அபிவிருத்திக்கான வழியில் இருகை இரேகைகளும் எந்தெந்த முறையில் ஒத்திருக்கின்றன என்றும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

இருதய இரேகை நன்கு பதிந்து சிவந்த நிறத்தோடு இருப்பின் மனோ உறுதி, தளராத ஊக்கம், இவைகளைத் திடமாகக் குறிக்கும். மெல்லிய இருதய இரேகை சிவந்திருக்குமாயின் தன்னலத்தையும் குறுகிய புத்தியையும் காட்டும். சிவந்த நிறம் நல்ல இரத்தமுள்ள தேகம் என்பதோடு உள்ளிடமான உத்வேகத்தை புத்தியில் அடக்கிக் காட்டும்.

செவ்வாய் ஆதிக்முள்ளோருக்கு சிவந் நிறத்துடன் இருதய இரேகை காணப்படுவது ஆபத்தானது. அது கோபதாபத்துடன் ஏற்படும் இரத்தக் கொதிப்பைக் காட்டும். அளவுக்கு மிஞ்சிப் புசிக்கும் ஆகாரத்தாலும் அளவுக்கு மிஞ்சிய சித்தவிருத்தியாலும் இருதயம் வேகம் தாங்காமல் மாரடைப்பு ஏற்படும்.

இருதய ரேகையில்மஞ்சள் நிறம் காணப்படில், பாசமுள்ள இடத்தில் மயக்கம்தரும். பித்தாதிக்கம் எப்பொழுதுமே கெடுதலை உண்டாக்கும். வெண்மையை விட மஞ்சள்நிறம் மிகக் கேட்டை விளைவிக்கும். சனி ஆதிக்கரை குற்றவாளியாக்கிவிடும். புதன் ஆதிக்கருக்கு ஏமாற்றுங் குணத்தைக் கொடுக்கும். மஞ்சள் நிறம் இருதய அங்கம் தன்னிலை கெட்டுவிட்டதைக் குறிக்கும். நகங்களையும் கவனித்தல் நலம்.

இருதய இரேகைகளில் சின்னஞ் சிறு இரேகைக்குறிகள் தோன்றினால், யாது பலன் என எவரும் எதிர்பார்க்கத் தக்கது. இருதய இரேகை முதலாவது இருதய அங்கத்தின் அமைப்பு, இரண்டாவது ஸ்தூல தேகத்தின் நிலை, மூன்றாவது வாழ்வின் ஏற்றத் தாழ்வுக்கான வழியில் மனம் எவ்வாறு இழுக்கப்படுகிறது என்பது ஆகிய இவைகளைக்காட்டும். இம் மூன்றும் எல்லோருடைய கைகளிலும் ஒருங்கே அமைவதில்லை. முதலிரண்டையும் பெரும்பாலும் அனேகர் கைகளில் பார்க்கலாம்.. மூன்றாவதான வாழ்வின் மர்மம் வெகு அபூர்வம். ஏனெனில் மூளை எவருக்கு விஷேடமாய் வேலை செய்கிறதோ அவருக்குத் தான் சில குறிகள் புலப்படும்படி அமைகின்றன.




இரேகைக் குறிகளை கவனிக் குமிடத்து பிரவிர்த்தியைக் குறிக்கும். விதிரேகையையும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

இருதய இரேகை செம்மையாய் அமைந்திருப்பினும் சில இருகைக் குறிகள் காணப்படும். தேகாரோக்கியத்தைக் குறிப்பதாயின், ஆயுள் இரேகையிலுள்ள இரேகைக் குறிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும்.

(தொடரும்)

**சக்தி**

# துரோகிகள் என பட்டியலிட்டுப்பார்த்தால்

# தேசியம் குறித்து பேசும் பலர் துரோகிகள்தான்

## சிவாஜிலிங்கத்தின் கருத்துக்கு யோகேஸ்வரன் கண்டனம்

(மட்டக்களப்பு)

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அமைச்சர் செ. இராசதுரை துரோகி என கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூச்சலிட்டு எதிர்ப்பு தெரிவித்தமைக்கு பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை மடடக்களப்பு மண்ணில் இருந்து உதயமான ஆரம்பகால இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஆவார். இவர் தந்தை செல்வாவுடன் நீண்டகாலமாக உறவை பேணி வந்ததுடன் அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

அதுமட்டுமின்றி அக்காலத்தில் அவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பாக சிறைவாசத்தையும் அனுபவித்துள்ளார்.

ஆனால் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் ஏற்பட்ட சில முரண்பாடுகள் காரணமாகவும் சிலரின் செயற்பாடுகள் காரணமாகவும் இவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பிரவேசிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானார் என மட்டக்களப்பு வாழ் மக்களின் பொதுவான கருத்தாகும்.

அதுமட்டுமின்றி தற்போதும் பரம்பரை பரம்பரையாக தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களாக திகழ்ந்து வரும் மட்டக்களப்பு வாழ்மக்கள் யாழ்ப்பாணத்தில் முன்னாள் அமைச்சர் செ. இராசதுரைக்கு எதிராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கை குறித்து மிகுந்த வேதனையடைந்துள்ளனர்.

ஒரு காலத்தில் தமது சொற்பொழிவால் தமிழரசுக் கட்சியை வளர்த்த செ. இராசதுரை அவர்களுக்கு சொல்லின் செல்வர் என போற்றிய இடத்தில் இச்செயற்பாடு நடந்துள்ளது.

முன்னாள் அமைச்சர் தற்போது எதுவித அரசியலிலும் ஈடுபடாது ஆன்மீகத்துறையிலேயே முற்றுமுழுதாக தம்மை அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றார்.

இவ்வேளை தந்தை செல்வாவை கௌரவிக்க வேண்டும் என்பதற்காக அரசியல் சார்பின்றி இந்நிகழ்வில் நினைவுப் பேருரையாற்ற சென்றிருந்தார்.

இவ்வேளை இவருக்கு துரோகிப் பட்டம் சூறப்பட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

ஆனால் இவர் இப்போது 1983 ஆம் ஆண்டுக்கு முன் நடந்த சம்பவத்தை வைத்து பிரதேசவாத அடிப்படையில் துரோகிப் பட்டங்களை சூட்ட முற்பட்டிருக்கின்றார்.

அண்மையில் எமது தமிழ் தேசிய கொள்கைக்கு துரோகிகளாக இருப்பவர்களுடன் தானே கூட்டு சேர்ந்தார்.

எனவே சிவாஜிலிங்கத்தின் இந்நடவடிக்கை மட்டக்களப்பு வாழ்மக்களை அவமதித்துள்ளது.

நாங்கள் வடக்கு, கிழக்கு வாழ் எம் தமிழ் மக்களின் தாயகம் என்பதையும் வடக்கு கிழக்கு மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தே எமது அரசியல் உரிமையை கோரிக்கை கொண்டும் பிரதேசவாத உணர்வை தகர்த்தெறிந்து வரும் வேளையில் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முயல்வது எம்மக்களிடையே ஒற்றுமையை சீர்குலைப்பதுடன் சில உதிரக் கட்சிகளும் இனிப்பு கொடுப்பதாக அமைந்துவிடும்.

இன்றும் தமிழரசுக் கட்சியின் அபிமானிகள் பலர் செ.இராசதுரையின் அபிமானியாக உள்ளனர்.

ஆனால் துரோகிகள் என பட்டியல் இட்டு பார்க்கப்போனால் தற்போது வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த்தேசியம் பேசும் பலர் துரோகிகள் பட்டியலில் அடங்குவர். இது சார்பாக சிவாஜிலிங்கம் அறியவில்லையா? என கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# பெண்ணின் சங்கிலியை அபகரித்தவருக்கு

# ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

பெண் ஒருவரிடம் 55 ஆயிரம் பெறுமதியான தங்கச் சங்கிலியினை அறுத்தவர் என்ற குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்ளாமல் இரு வருடங்களாக தான் சுற்றவாளி என யாழ். நீதிமன்றில் வாதாடி வந்த நிலையில் நேற்று முன்தினம் குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து குறித்த நபருக்கு ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையை யாழ். நீதிமன்றம் விதித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 14 ஆம் திகதியன்று வல்வெட்டித்துறையினைச் சேர்ந்த பெண்ணொருவரினை அச்சுறுத்தி அவரது தங்கச் சங்கிலியை பிரஸ்தாப நபர் திருடியுள்ளார்.

சம்பந்தப்பட்ட பெண் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டினை தொடர்ந்து செட்டியார் தோட்டம் முத்திரைச் சந்தியினை சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வழக்கு நேற்று யாழ். நீதிபதி மா. கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படட போது குற்றம் நிரூபிக்கப்பட்டு குறித்த நபருக்கு ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (ந-4)


# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் இளையதம்பி மகாலிங்கம்



தோற்றம்
26 . 04 . 1948

திதி:-அட்டமி

மறைவு
10 . 05 . 2011

அன்பாய் பேசிப் பண்பாய் வாழ்ந்த எம் குடும்ப விளக்கே
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் மாறலாம் கோலங்கள் மறையலாம்
கடைசியில் நிலைத்திருக்கும் உம் நினைவுகளுடன்
முதலாம் ஆண்டுத்திதியில் உமை நினைத்து வணங்குகின்றோம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினரும்
ஜோதீஸ்வரி கல்லுடைக்கும்
தொழிற்சாலையின் தற்போதைய
உரிமையாளரும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(அ-6458)

# விடுதலைப்புலிகளின் தோல்விக்கு காரணம் கற்பிக்கின்றார் கலைஞர்

**இலங்கையில் இறுதிப்போரில் விடுதலைப்புலிகள் வெற்றிபெறாமல் வீழ்ந்து போனதற்கு காரணம் ஓரணியாய் நின்று போரிடாதது தான் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிகையில் மேலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

ஈழத் தமிழர்கள் மீது இன்றைக்கு காட்டும் உணர்வுபூர்வமான அக்கறையை இலங்கையில் போர் நடைபெற்ற போதே காட்டியிருக்கக்கூடாதா என்ற ஆதங்கம் உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர்களுக்கு இருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

இறுதிப்போரின் போது ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டதை தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்று எண்ணுகின்றனர்.

ஆனால் கேட்பவர்களுக்கு தெரியும் விடுதலைப்புலிகள் வெற்றியைப் பெறாமல் வீழ்ந்து போனதற்கு காரணம் ஓரணியாய் நின்று போரிடாதது தான்.

சகோதர யுத்தம் வேண்டாம் என்று காலில் விழாத குறையாக ஒவ்வொரு அணியினரின் கரம் பிடித்து கெஞ்சிக் கேட்டும் அவர்களின் உள்பகையை தீர்க்க முடியவில்லை.

இந்த உள்பகையால் ஓர் இனம் பெற வேண்டிய வெற்றியின் காலகட்டத்தையே தள்ளிப் போட வேண்டிய சோக நிகழ்வாக் அமைந்துவிட்டது.

இறுதி யுத்தம் நடைபெற்ற போது அதை தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசும் மத்திய அரசும் இயன்றவரை எல்லா நடவடிக்கைகளையும் செய்தது. ஆனால், இலங்கை அரசு கொடுத்த உறுதிமொழிகளையெல்லாம் மீறி தமிழ்ப் போராளிகளைக் கொன்று குவித்தது.

சகோதர யுத்தத்தினால் ஏற்பட்ட சரிவைப் பயன்படுத்தியே இலங்கை அரசு வெற்றி பெற்றது. இருப்பினும் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்ட தோல்வி நிரந்தமானது இல்லை.

களத்தில் மறைந்த அனைவருக்கும் இறுதி வணக்கத்தை தெரிவித்து தமிழ் இனம் தலைநிமிர உடல், பொருள், ஆவி அனைத்தையும் தரத் தயங்க மாட்டோம் என்ற உறுதியுடன் அறப்போர் தொடர்ந்திட அணிவகுப்போம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## வலி. வடக்கு மக்களுடன் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றம் சம்பந்தமாக வலி. வடக்கு மக்களுடனான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆ.சி. நடராசா கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வலி. வடக்கு பிரதேச செயலர், மின்சார சபைத் தலைவர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் வலி. வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட, மீள்குடியேறவுள்ள மக்களுடைய சகல பிரச்சினைகளும் ஆராயப்படவுள்ளதாகவும் அனைத்து மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் மீள்குடியேற்ற அமைப்புத் தலைவர் மு. விநாயகமூர்த்தி அறிவித்துள்ளார். (ந-9)



ரதுகல ஆதிவாசிகளின் புதுவருட விழா முதன்முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை ரதுகல வன பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆதிவாசிகளின் பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.

# ஜம்மியத்துல் உலமாவுக்குள் பிளவு; புதிய அமைப்பை உருவாக்க முயற்சி

தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்டமை தொடர்பான விடயத்தை அடுத்து இலங்கையில் பலம்மிக்க இஸ்லாமிய இயக்கமாக இருந்து வந்த அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபைக்கு எதிராக மற்றும் ஒரு சபை நேற்று முன்தினம் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை என்ற பெயரில் இந்த அமைப்பே நேற்று முன்தினம் தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை, ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட போதும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து வந்தது.

எனினும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை இலங்கையின் அரசாங்கத்துடன் இணைந்துள்ள முஸ்லிம் அமைச்சர்களுக்கு ஆதரவாக செயற்படுகிறது. அது தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதல் விடயத்தில் உரிய எதிர்ப்புக்ளை வெளியிடவில்லை.

எனவே, தாம் இனிமேல் முஸ்லிம் மக்களுக்கான உரிமைகளுக்காக போராடப் போவதாக இலங்கை ஜம்மியத்துல் உலமா அறிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவில் இணைந்திருக்கப் போவதில்லை என்றும் இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி மிப்லால் தெரிவித்துள்ளார். (அ-2)

# மருத்துவசேவைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி

## பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு மாலபே தனியார் மருத்துவ கல்லூரி அரச நிறுவனங்களை ஏமாற்றும் வகையில் அமைக்கப்பட்ட ஒன்று என்று நிரூபணமாகியுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான செயலாளர் கருணாதிலக்க திசாநாயக்க செய்தியாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தக்குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மாலபே மருத்துவக் கல்லூரி தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டகுழுவின் அறிக்கையில் இந்த விடயம் உறுதியாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்பம் மற்றும் முகாமைத் துவப் பட்டங்களை வழங்குவதற்கான அனு மதியை பெற்றுக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த கல்லூரி மருத்துவ சேவைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளதாக கருணாதிலக்க திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அழகியல் துறை பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான செயற்பாட்டு பரீட்சையை நிறுவுவதற்கு உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஒன்றியத்தின் இணைப்பாளர் சஞ்சீவ பண்டார இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். (அ-2)

# அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைகளை அகற்றுங்கள்

## கொழும்பு மாநகர உறுப்பினர் அசாத் சாலி ஆவேசம்

(கொழும்பு)

அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள அனைத்து புத்தர் சிலைகளும் உடைத்து அகற்றப்பட வேண்டும் எனவும் தம்புள்ள பள்ளிவாசல் தொடர்பில் எந்த அடிப்படைவாத கருத்துக்களையும் தாம் வெளியிடவில்லை எனவும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் தற்போதைய உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் எந்த சந்தர்ப்பத்தில் அடிப்படைவாத கருத்துக்களை வெளியிட்டதில்லை. எனினும் சட்டவிரோதமான, அனுமதியற்ற சமய வழிபாட்டு தலங்கள் அகற்றப்பட வேண்டுமாயின் அனைத்து சட்டவிரோத மத வழிபாட்டுத் தலங்களையும் அகற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன்.

நான் இவ்வாறு தெரிவித்த கருத்துக்களை பௌத்த அடிப்படைவாதிகளும் இனவாதிகளும் திரிவுபடுத்தி பிரசாரம் செய்து வருகின்றனர். இவற்றைத் தடுக்க என்னால் முடியாது. எனினும் அரசாங்கம் இவற்றுக்கு உடனடியாக தீர்வுகளை வழங்க வேண்டும்.

இந்த நாட்டில் உள்ளவர்கள் சிலருக்கு இன, மத பேதங்களை ஏற்படுத்தி அவற்றில் பிரயோசமடையும் தேவையுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கலைஞர் கருணாநிதி தமிழக மக்களை முட்டாளாக்க முயற்சிக்கின்றார்

## மலையக மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் கருணாநிதி தமிழக மாநில மக்களை முட்டாளாக்க முயற்சித்து வருகின்றார். மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை பொறுப்பாளர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நெருக்கடிக்கு ஆழ்த்தும் நோக்கில் இலங்கையில் தனித் தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என கருணாநிதி கோருகின்றார்.

இந்த கோரிக்கை அடிப்படையற்றது.

கருணாநிதி தமிழக முதல்வராக இருந்த காலத்தில் இலங்கை விவகாரத்தில் அமைதியை பேணி வந்தார்.

கருணாநிதியின் மகள் கனிமொழி உள்ளிட்ட பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்து நாடு திரும்பி வெளியிட்ட அறிக்கைக்கு இதுவரையில் என்னவாயிற்று எனத் தெரியாது?

இந்திய எதிர்க்கட்சித் தலைவி தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் நாட்டின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்து தகவல்களை திரட்டி சென்றுள்ளது. இந்நிலையில் கருணாநிதி சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட்டு வருகின்றார்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வினை தமிழ் மக்கள் கோருவதாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதனையே கோருவதாகவும் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (அ-2)

# தூத்துக்குடி கப்பல் சேவை நிறுத்தம்; இலங்கை அகதிகள் திரும்பலில் வீழ்ச்சி

## அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருட முதற் காலாண்டு பகுதியில் குறைவடைந்திருந்ததாக அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கொழும்பு -தூத்துக்குடி கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டமையும் இதற்கு பகுதியளவில் காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட முதற் காலாண்டு பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகலாலயத்தின் உதவியுடன் 408 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளதாக அவ்வமைப்பின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 597 பேர் நாடு திரும்பியிருந்தனர்.

இந்த எண்ணிக்கை குறைவடைந்தமைக்கு சரியான காரணம் தெரியவில்லை. ஆனால், கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டமையும் இதற்கு காரணமாக இருக்கலாம். கடல் வழியாக நாடு திரும்புவதற்கு தாம் விரும்புவதாகவும் இதன் மூலம் தமது வீட்டு பாவனை பொருட்களை அதிகளவில் தம்முடன் கொண்டு செல்ல முடியும் எனவும் அகதிகள் எம்மிடம் தெரிவித்துள்ளனர் என அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் இலங்கைக்கான பிரதிநிதி மைக்கல் ஸ்வாக் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் மொத்தமாக அவ்வமைப்பின் உதவியுடன் ஆயிரத்து 728 அகதிகள் இலங்கைக்கு திரும்பினர். (அ-2)

# விலை உயர்வு சவால்களுக்கு முகம்கொடுக்க தயாராகுங்கள்

## விமல் வீரவன்ச அழைப்பு

கோதுமைமா கிலோவொன்றுக்கு 15 ரூபா வரி விதிக்கப்பட்டபின் பாணின் விலை 5 அல்லது 6 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டால் மூன்று வேளையும் பாண் உண்ணும் குடும்பமொன்றுக்கு வெற்றிலைச் சுருள்களுக்கான இரண்டிற்குரிய செலவே மேலதிகமாக ஏற்படும் என அமைச்சர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

விலை உயர்வினால் ஏற்படும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் நிலையில் ஒரு நாடென்ற வகையில் நாம் உள்ளூர் உணவு உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும். அரிசியும் அரிசி மாவும் குறைந்த விலையில் சந்தையில் கிடைக்கும் நிலையில் உணவுப் பழக்கங்களை மாற்றுவதற்கான தருணம் இதுவாகும்.

உள்ளூர் உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக கோதுமைமா மீதான வரியை அதிகரிப்பதற்கு நாம் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது தீர்மானித்தோம். ஆனால், விவசாயிகள் தங்கள் அறுவடையை விற்க முடியாதுள்ளதால் அதை இன்னும் அமுல்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# களனி பிரதேசத்தை லிபியாவாக மாற்ற சிலர் முயற்சிக்கின்றனர்

## சண்டியன் மேர்வின் கூறுகிறார்

(கொழும்பு)

களனி பிரதேச சபையின் துணைத் தலைவரின் வீட்டின் மீது தாம் தாக்குதல் நடத்தவில்லை என தெரிவித்துள்ள மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவினை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு சிலர் அமைச்சருக்கு எதிராக சதித் திட்டங்களை தீட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் களனி பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் பணிகளை எவராலும் தடுக்க முடியாது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

களனி பிரதேச சபையின் உறுப்பினர் ஒரு களனி பிரதேசத்தை லிபியாவாக மாற்ற அமைச்சர் மேர்வின் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியிருந்தார்.

களனிபிரதேசசபையின்துணைத் தலைவரது வீட்டுக்கு அருகாமையில் உள்ள சட்டவிரோத கட்டடமொன்றை பார்வையிடச் சென்ற அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

களனியை யார் லிபியாவாக மாற்ற விரும்புகின்றார்கள் என்பது இதன் மூலம் புலனாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை களனி பிரதேச சபையின் துணைத் தலைவரது வீட்டின் மீது அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் பிரதேச சபையின் துணைத் தலைவரது சகோதரர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.04 29

★ 1672-பிரான்சின் பதின்நான்காம் லூயி மன்னன் நெதர்லாந்தை முற்றுகையிட்டான்.

★ 1770-ஜேம்ஸ்குக் அவுஸ்திரேலியாவின் இன்றைய சிட்னியை அடைந்து தான் சென்ற இடத்துக்கு பொட்டனி விரிகுடா எனப் பெயரிட்டான்.

★ 1862-அமெரிக்க உள்நாட்டு போர்: நியூ ஓர்லென்ஸ் நகரம் கூட்டணிப் படையிடம் விழ்ந்தது.

★ 1882-பெர்லின் நகரில் ஏலெக்ட்ரோமோட் எனப்படும் பேருந்து வெள்ளோட்டம் விடப்பட்டது.

★ 1903-கனடாவின் அல்பேர்ட்டாவில் 30 மில்லியன் கன மீற்றர் நிலச்சரிவு ஏற்பட்டதில் 70 பேர் உயிரிழந்தனர்.

★ 1916-முதலாம் உலகப் போர்: பிரித்தானிய இந்தியப் படைகள் ஒட்டோமான் படைகளிடம் ஈராக்கின் கூட் என்ற இடத்தில் சரணடைந்தன.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: இத்தாலியில் ஜேர்மனிய இராணுவம் நேச அணிகளிடம் நிபந்தனையின்றி சரணடைந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தின் பல பகுதிகளிலும் உணவுப் பொதிகளை விமானத்தில் இருந்து வீசும் மானா நடவடிக்கையை ஐக்கிய இராச்சிய வான்படையினர் ஆரம்பித்தனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஹிட்லர் ஏவா பிரௌன் என்ற தனது நீண்ட நாளைய காதலியை தனது பேர்லின் சுரங்க அறையில் வைத்து மணம் புரிந்தார். இருவரும் அடுத்த நாள் ஏப்ரல் 30 இல் தற்கொலை புரிந்து கொண்டனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டாக்கவ் என்ற இடத்தில் இருந்த வதைமுகாமை அமெரிக்கப் படைகள் விடுவித்தன.

★ 1946-ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஹிடெக்கி டோஜோ மற்றும் 28 முன்னாள் தலைவர்கள் போர்க் குற்றங்க கைது செய்யப்பட்டனர்.

★ 1970-வியட்நாம் போர்: அமெரிக்க மற்றும் தென் வியட்நாம் படைகள் வியட்கொங் போராளிகளைத் தேடி கம்போடியாவை முற்றுகையிட்டன.

★ 1975-வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க குடிமக்கள் சாய்கோன் நகரை விட்டு புறப்பட்டனர்.

★ 1986-லொஸ் ஏஞ்சலீஸ் நகர பொது நூலகம் தீப்பிடித்ததில் 4 இலட்சம் நூல்கள் அழிந்தன.

★ 1991-வங்காளதேசத்தில் சிட்டாகொங்கில் இடம்பெற்ற சூறாவளியில் ஒரு இலட்சத்து 38 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர். 10 மில்லியன் பேர் வீடுகளை இழந்தனர்.

★ 2005- 29 ஆண்டு கால முற்றுகையின் பின்னர் லெபனானில் இருந்து சிரியா முற்றாக வெளியேறியது.

### பிறப்புக்கள்

★ 1818-இரண்டாம் அலெக்சாண்டர், ரஷ்யாவின் பேரரசன் (இ.1881)

★ 1891-பாரதிதாசன், புரட்சிக் கவிஞர், பாவேந்தர் (இ.1964)

★ 1938-திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (இ.2010)

★ 1957-மேமன்கவி, ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கியப் படைப்பாளி

★ 1970-அன்ட்ரே அகாசி, முன்னணி டெனிஸ் ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1843-வின்சென்ட் ரொசாரியோ, இலங்கையின் முதல் ஆயர்

★ 1980-ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக், ஆங்கில திரைப்பட இயக்குநர் (பி.1899)

### சிறப்பு நாட்கள்

★ ஜப்பான் சுதந்திர தினம்

★ அனைத்துலக நடன தினம்



★ 1848-இந்திய ஓவியர் ரவி வர்மா, பிறந்த தினம் (இ.1906)

# இத்தாவில், வேம்பொடுகேணி மக்களை மீள்குடியமர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி மக்களை மீள்குடியேற்றவுள்ளதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில், முகமாலை மற்றும் இத்தாவில் பிரதேசத்தில் மேற்கொண்டு வந்த மிதிவெடிப்பொருட்கள் அகற்றல் செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்து முகமாலைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஆராய்வுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், முகமாலைப் பகுதியின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காகவே அப்பகுதியில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. அச்செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்து நாம் தொடர் கண்காணிப்பினையும் ஆய்வினையும் மேற்கொண்டு வந்தோம். அதற்கமைவாக செயற்பாட்டில் ஈடுபட்டவர்களின் தீவிர முயற்சியின் காரணமாகவும் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி முகமாலைக்கு அண்மித்த பகுதியான இத்தாவில் மற்றும் வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் முதற்கட்ட மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது.

இந்தப் பகுதிகளுக்குச் சென்று மக்கள் மீள்குடியேறலாம். இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை மக்களுக்கு தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். குறுகிய நிலப்பரப்பில் மிகச் செறிவாக புதைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் அகற்றப்பட்ட நிலையிலேயே இங்கு மீள்குடியேற்றம் நடைபெறுகின்றது.

எனவே, அங்கு மக்களை மீள்குடியேற்றுவதில் எம்மோடு இணைந்து அனைத்து தரப்பினரும் காட்டிய ஆர்வமும் முயற்சியுமே இம் மீள்குடியேற்றத்திற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இந்நிலையில் முதற்கட்ட மீள்குடியேற்றத்திற்கு தெரிவான பகுதிகளான இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அனைவரும் முழுமையாக குடியமர முன்வர வேண்டும். அதனூடாகவே குறித்த பகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த முடியுமென தெரிவித்தார்.

அத்துடன் முதற்கட்டமாக மீள்குடியேறும் மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் வேம்பொடுகேணி பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையையும் குறித்த அதிகாரிகள் மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினரால் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த மீள்குடியேற்றத் திகதியிலிருந்து அடுத்து வரும் ஒருமாத காலத்திற்குள் ஏனைய பகுதிகளிலும் மீள்குடியேற்றத்தை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (அ-6)

## நடனப்பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கலும்

கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் இரண்டாவது தடவையாக கடந்த ஒரு வருட காலமாக நடத்தப்பட்ட கண்டிய நடன பயிற்சி நெறியின் நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பிரதேசச் செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

# பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் அரசின் நடவடிக்கை ஏற்கக்கூடியதல்ல

## த.தே.கூட்டமைப்பு கண்டனம்



தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கவில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புனித பிரதேசங்களை பாதுகாக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் சிறுபான்மை இன, மத வழிபாட்டுத் தலங்கள் ஒரு விதமாக கவனிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஒரு மத வழிபாட்டுத் தலத்தை அகற்றி வேறும் இடத்தில் அமைப்பது ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் பல இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டுள்ளதாகவும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தான் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சிறுபான்மை சமூகங்களை வேதனைப்படுத்தும் வகையில் அமையக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். அனைத்து விதமான வன்முறைகளும் கண்டிக்கப்பட வேண்டியவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# நிறைவேற்று அதிகார முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும்


## அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டுமென ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் மற்றும் தேர்தல் முறைமையை மாற்றியமைத்தல் தொடர்பில் சில யோசனைகளை கட்சி ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையைப் பரிந்துரைகள் தொடர்பில் கூட்டணி கட்சிகளிடம் கருத்து கோரியமைக்கு பதிலளிக்கும் வகையில் கம்யூனிஸ்ட் கட்சி இந்த யோசனைகளை முன்வைத்துள்ளது. (அ-2)



ஏ9 வீதி மாங்குளத்திற்கு அண்மையில் சுமையுடன் யாழ்.நோக்கி பயணித்த பார ஊர்தி ஒன்று தலைகீழாக தடம்புரண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# எண்ணெய் வள அகழ்வாய்வின் இரண்டாம்கட்டம் 2013 இல்

## கெய்ன்லங்கா நிறைவேற்று பணிப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கெய்ன் லங்கா நிறுவனம் தனது இரண்டாம்கட்ட வேலைகளை 2013 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் வழிகாட்டலின் கீழ் நிபந்தனைகளுக்கு அமைவாக அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள கெய்ன் லங்கா கட்டுப்பட்டுள்ளது என நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ராகுல் தீர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்னார் கடற்பரப்பில் கெய்ன் லங்கா நிறுவனத்தால் கண்டு பிடிக்கப்பட்ட எரிவாயு கிணறுகளில் ஒன்றான CLPL Dorado-91H/1z இன் வர்த்தக பெறுமதியை கெய்ன் லங்கா வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கும் கெய்ன் லங்காவுக்கும் இடையிலான பெற்றோலிய வள உடன்படிக்கைக்கு அமைய இது வெளியிடப்பட்டுள்ளது.

கெய்ன் இந்தியாவின் காலாண்டு மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ராகுல் தீர் இத் தகவல்களை முன்வைத்துள்ளார்.

கெய்ன் இந்திய நிறுவனம் இலங்கை அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைய மன்னாரில் மூன்று இடங்களில் எரிவாயு கிணறுகளை தோண்டுவதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டது. ஆயிரத்து 753 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 3 தரவுகள் மூலம் அதிர்வுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு முதற்கட்டமாக மூன்று கிணறுகள் துளையிடப்பட்டன. (அ-2)

# மன்னாரில் கலாசார மண்டபம் அமைக்க 250 மில்லியன் ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னாரில் கலாசார மண்டபம் அமைப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 250 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச செயலாளர் ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு பின்புறமாகவுள்ள காணியில் கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழியங்கும் கெயார் திட்டப் பணிப்பாளர் கெ.பல்ல கெதர, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் திட்டப் பணிப்பாளர் பண்டார ஆகியோர் கடந்த வியாழக்கிழமை பார்வையிட்டனர்.

சுமார் ஆயிரத்து 500 பேர் ஒரே நேரத்தில் நிகழ்வுகளை கண்டுகளிக்கக்கூடிய வகையில் இக்கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளதாகவும் மன்னார் பிரதேச செயலாளர் குறிப்பிட்டார். (அ-2)

# இலங்கை சென்று மதங்களின் உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

## ஐ.நா.சபையிடம் உருத்திரகுமாரன் கடிதம்

(கொழும்பு)

**இலங்கைக்கு சென்று அங்கு இடம்பெற்ற மதங்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஐக்கிய நாடுகளிடம் கோரியுள்ளது.**

ஐக்கிய நாடுகளின் சட்டவிரோத கொலைகள் மற்றும் மத விடுதலை தொடர்பான விசேட நிபுணர் ஹெய்னர் பிலபெல்ட்க்கு இது இந்தக் கோரிக்கையை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமார் கடிதம் மூலம் விடுத்துள்ளார்.

இலங்கையில் பௌத்த பிக்குமாரால் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றன. அண்மையில் தம்புள்ள பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதேநேரம் இலங்கை அரசாங்கத்தினால் இந்துக் கோயில்கள் மூடப்படுகின்றன.

எனவே, உடனடியாக இலங்கைக்கு சென்று பௌத்த மதங்களை தவிர்ந்த ஏனைய மதங்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

அத்துடன் மதங்களை பாதுகாப்பதற்காக சர்வதேச பொறிமுறை ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் பௌத்த பிக்குமார் அதிகாரம் மிக்கவர்களாக கருதப்படுகின்றனர். 1958 ஆம் ஆண்டு தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியமைக்காகவே அப்போதைய இலங்கை பிரதமர் பண்டாரநாயக்க பௌத்தபிக்கு ஒருவரால் கொல்லப்பட்டமையை உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்புள்ளயில் பள்ளிவாசல் தாக்கப்பட்ட அதேநேரம் திருகோணமலையில் 60 வருட பழைமைவாய்ந்த பிள்ளையார் கோயில் ஒன்றை அகற்றுமாறு இலங்கை அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## பரிசளிப்பு விழா

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி முதல்வர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிய செயற்றிட்ட சேவைகள் லிமிட்டெட் முகாமைத்துவ இணைப்பாளர் திருக்குமார் நடேசன், சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் ஈ.இளங்கோவன், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# சமாதான காலத்தில் கடத்தல்களை ஊடகங்கள் மிகைப்படுத்துகின்றன

## ஊடக மத்திய நிலைய பணிப்பாளர்

கடத்தல் சம்பவங்கள் ஒன்றும் புதிதல்ல என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

கடத்தல் சம்பவங்கள் கடந்த காலங்களிலும் இடம்பெற்றதாகவும் தற்போது அதிகளவில் ஊடகங்களில் கடத்தல்கள் பற்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

நாட்டில் 95 வீதமான வான்கள் வெள்ளை நிறத்தைக் கொண்டவை. ஆனால், அரசாங்கம் வெள்ளை வான்களில் நபர்களைக் கடத்தவில்லை. எவரையும் கைது செய்ய வேண்டுமாயின் சட்ட ரீதியில் கைது செய்யக் கூடிய அதிகாரம் அரசாங்கத்திடம் காணப்படுகின்றது.

கடந்த ஐம்பது, அறுபது வருடங்களாக கடத்தல்கள் மற்றும் விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த காலங்களை விடவும் கடத்தல் சம்பவங்களுக்கு தற்போது ஊடகங்கள் கூடுதல் முக்கி வம் அளிக்கின்றன.

கடந்த இரண்டு தசாப்த காலமாக யுத்தம் பற்றிய செய்திகள் வெளியானதாகவும் தற்போது சமாதானம் நிலவி வருவதனால் ஊடகங்கள் கடத்தல் சம்பவங்களை முன்னிலைப்படுத்துகின்றன. வெள்ளைவான் கடத்தல் பீதியை ஊடக நிறுவனமொன்றே உருவாக்கியது.

இராஜதந்திர அழுத்தங்கள் காரணமாக பிரேம்குமார் குணரட்னம் கடத்தப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை. பிரேம்குமார் கடத்தப்பட்டதாக வெளியான தகவல்களிலும் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசாங்கத்தின் தேவையற்ற செலவீனம் பொருட்களின் விலையுயர்விற்கு காரணம்



## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகளே நாட்டில் பொருட்கள் சேவைகளுக் கான விலைகள் உயர்வடையக் காரணம் என ஜே.வி.பி.குற்றம் சுமத்தியுள்ளது.

பொருட்களின் விலையேற்றத்தினால் மக்களை மேலும் மேலும் அரசாங்கம் நெருக்கடியில் ஆழ்த்தி வருவதாக குறிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் வீண்விரயங்களினால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய மக்கள் மீது வரிச்சுமை திணிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

கோதுமைமாவின் விலையேற்றத் திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் ஜே.வி.பி. வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை, கோதுமைமா விலையேற்றத்திற்கு எதிராக போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர் சமூகம் கோதுமைமாவை பிரதான உணவாகக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். கோதுமைமாவின் விலையேற்றம் பெருந் தோட்ட சமூகத்தை பெரிதும் பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோதுமைமா விலை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும் இதுவரையில் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# இலங்கை பெண்கள் 29 பேர் ஜோர்தானில் நிர்க்கதி

(கொழும்பு)

பணிப்பெண்களாக தொழில் பெற்று ஜோர்தான் சென்றுள்ள இலங்கைப் பெண்கள் 29 பேர் அம்மான் நகரில் நிர்க்கதி நிலைக்குள்ளாகி இருக்கின்றனர்.

சிலர் பொலிஸ் நிலையமொன்றிலும் இன்னும் சிலர் கட்டடம் ஒன்றிலும் தற்போது தங்கியிருப்பதாக ஜோர்தானிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்கள் குறிப்பிட்டனர்.

உணவு, மென்பானங்கள் இன்றி பல் வேறு பிரச்சினைகள் காரணமாக மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக அந்தப் பெண்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதுவர் காமினி ராஜபக்ஷ தெரிவிக்கையில், இந்தப் பெண்கள் தொடர்பாக தமக்கு இதுவரை பதிவாகவில்லை எனக் கூறினார்.

எனினும் அவர்கள் குறித்து உடனடியாக ஆராய்ந்து பார்ப்பதாக ஜோர்தானுக்கான இலங்கை தூதுவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

மீண்டும்
உங்கள் அபிமானத்துக்குரிய....
சங்குநாதம்
வலம்புரியுடன் இணைந்து ஞாயிறு வாரமலராக
மிகவிரைவில்

- ஆலடிமாநாடு
- வியாசர் கேள்வி பதில்
- சிறுகதை
- அரசியல் ஆய்வு
- சமூகக் கருத்தாடல்கள்

இன்னும்பல...

- ஆலடி மாநாட்டிற்கான தகவல்கள்
- சிறுகதைகள்
- அரசியல் ஆய்வுகள்
- வியாசர்கேள்வி பதில்கள்
- சமூகக் கருத்தாடல்கள்

இவற்றை நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

பிரதம ஆசிரியர்
வலம்புரி- சங்குநாதம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

# தமிழர் பிரச்சினை வெளிச்செல்வதை சார்க், அணிசாரா அவைகளூடாக முடக்கிய இலங்கையும் இந்தியாவும்

இந்தயப்பாராளுமன்றக்குழு இலங்கை வந்து திரும்பியிருக்கிறது. இந்தக்குழுவிற்கு ஜனாதிபதி எந்த வாக்குறுதிகளையும் வழங்கவில்லையென கொழும்பு தரப்பு தெரிவித்துள்ளது.

தமிழருக்கான அதிகாரப் பரவலாக்கத்திற்கான 13வது அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி எந்த வாக்குறுதிகளையும் வழங்கவில்லையென கொழும்பு தர்ப்பு கூறுகின்றது. இல்லை , அதுபற்றிப் பேசினோம் என இந்தியத்தரப்பு கூறுகின்றுது.

இரு நாடுகளினதும் பிரபல இரண்டு பத்திரிகைகளே இந்த முரண்பாடான செய்திகளை வெளியிட்டுள்ளன.

தூது வந்த குழுவை வரவேற்ற ஜனாதிபதி அதே தூதுக்கழு ஊடாகவே தெளிவாக ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்.

13 வது திருத்தச்சட்டத்திற்கு அடிப்படையான "ராஜீவ்- ஜே. ஆர்." இலங்கை-இந்திய ஒப்பந்தமே (1987) இந்தியாவால் இலங்கை மீது திணிக்கப்பட்டது என அவர் விபரமாக எடுத்துரைத்துள்ளார்.

இதனூடாக அவர் அதை அமுலாக்க இயலாததெனவும், இனியும் இந்தியா எதையும் செய்யும்படி இலங்கையைக் கோரக்கூடாதென தெளிவாக தெரிவித்துள்ளதாக எடுத்துக் கொள்ளவேண்டியுள்ளது.

வந்த தூதுக்குழு "நீங்கள், ஈழத்தமிழர் மீது இணைப்பை திணிப்பதால் தான் இந்தியராகிய



நாங்கள் அரசியற் தீர்வை உங்கள் மீது திணிக்க வேண்டியுள்ளது; வற்புறுத்துகிறோம் இனியும் இலங்கை இராணுவத்தை விலக்காது சிறியளவு அதிகாரத்தை பெயரளவில் ஆவது (13) தமிழருக்கு வழங்காது போனால், இந்தியாவாற் கூட சர்வதேச அழுத்தத்தில் இருந்து கொழும்பைக் காப்பாற்ற இயலாது என்பதை சுட்டிக் காட்டியிருக்கலாமே" விருந்து சாப்பிட்டுக்கொண்டே விடயத்தை கொடுப்பதுதானே ஜனநாயகம்.

ஆம் இவ்வாறு பேசத்தெரிவது அரிது, தெரிந்தாலும் பேசுவது அதனிலும் அரிது. கனடா விலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் இன்னும் பல நாடுகளிலிருந்தும் உறுதியாகப் பேசவந்த பொப்றே போன்ற பலரை ஜனாதிபதி நாட்டிற்குள் அனுமதிக்கவில்லை. இவரும் கனடாவில் எதிர்க்கட்சியை சார்ந்தவராயினும், கனேடிய அரசின் விருப்பத்தையும் பிரதிபலித்தவர் என்பதை கொழும்பு அன்றும்



கவனிக்கத்தவறிவிட்டது.

இந்தியாவின் அனைத்துக் கட்சிகளினதும் இந்திய தேசியக் குழுவாக வடிவெடுத்துவந்த *இந்த அம்மா* எதிர்க்கட்சித் தலைவி என்பதை கபடமாகப் பயன்படுத்த ஜனாதிபதி, காங்கிரஸ் கட்சிகால தலைமைகளான இந்திரா மற்றும் ராஜீவ் காந்தி போன்றவர்கள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தார்கள்; ஆனால், நீங்கள் எதிர்காலத்தில் பிரதமாராக வரும்போது, மொராஜிதேசாய் (1979) போல எங்களோடு நட்புடன் இருக்கலாம் என்ற துரியோதனன் பாணி இராஜதந்திரத்தையே பாவித்துள்ளார் எனக் கருத முடியும்.

இவ்வாறு பேச்சுக்களிலும் விருந்துகளிலும் இராஜ தந்திரக் குளிகைகள் பரிமாறப்படும், ஏககாலத்தில் புலம்பெயர் தமிழர்களது சமகால பங்களிப்புப் பணிகளின் வடிவங்கள் எவ்வாறு மாற வேண்டும் என்பதை ஆராய்வது நன்று.

புலம் பெயர்ந்த நாடுகளில் அரசியல் சாயம் பூசப்படாத, சமூக அமைப்புகளினூடாக இனப் பணியினை மேலும் எவ்வாறு வலுப்படுத்த, நாம் என்ன செய்ய வேண்டும் என்பதேசமகாலக் கேள்வியாகும். இந்த வலுப்படுத்தலுக்கு நேச சக்திகளாகவும், தடையாகவும் இருப்பவை எவை? அவற்றை எப்படிக் கையாள்வது போன்றவை பற்றி புலம்பெயர் மக்கள் சிந்திக்கும் காலமிது.

ஜனாதிபதி தென்கொரியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அமெரிக்காவிற்கு எதிரான ஈரானுடனான எண்ணெய் வர்த்தகத்தை கைவிட இலங்கை அரசு சிந்திப்பதாகவும் தெரிகிறது. இவ்வாறு ஈழத்தமிழர் விடயம் இன்று சர்வதேசமயப் பட்டதிற்கும் அப்பால் உலக அழுத்த அரசியலாகவே ஆகிவிட்டது.

இந்த உலக அழுத்த அரசியலில் நமது இனக் கடமையான அரசியற் பங்களிப்பு என்ன? அது எவ்வாறு ஆதரவாக அமைய வேண்டும் என்பதே நம்காலத் தேடலாக இருக்கவேண்டும்.

நமது இனப்பிரச்சினையை தனது கட்டிற்குள் வைத்திருக்க இந்தயா இன்னமும் விரும்புகிறது. 1983 யூலை இனக்கலவரத்துடன் அன்றையை தமிழர் தலைவர் அ.அமிர்தலிங்கம் இந்தியா சென்று அன்னை இந்திராவைச் சந்தித்த போது முதலிற் கேட்டது இந்த விடயத்தை ஐ.நா.விற்கு கொண்டு செல்ல உதவுங்கள் என்பதுதான். அதற்கு இந்திரா இதனை நாங்கள் ஐ.நா.கொண்டு சென்றால் மேற்குலகம் தங்களிற்குத் தேவையான முறையில் தீர்ப்பார்கள். எனவே நாங்கள் பிராந்திய மட்டத்தில் தீர்த்துக்கொள்வோம் என்று கூறியிருந்தமையை நாங்கள் கவனிக்க வேண்டும்.

உண்மையில் இந்தயா முள்ளி வாய்க்கால் கொடூரத்தின் ஊடாக இலங்கை இந்திய ஒப்பந்தம் என்ற பிராந்தியப் பொறியை மீண்டும பலப்படுத்துவதற்காக, அதற்கு சாதகமற்று எழுந்த 2002 ரணில் - பிரபா சமாதான ஒப்பந்தத்தையும் அதனூடாக மேற்குலகம் ஈழத்தமிழர் விவகாரத்தை கையாளும் வாய்ப்பையும் செயலிழக்க வைப்பதும் இன்னொரு நோக்கம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கனேடிய பாராளுமன்றத்தில் சனல்-4 காணொளி அங்குள்ள தமிழர்களின் முயற்சியால் மீண்டும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள நம்மவருக்கு நாம் பலமான ஆதரவை வழங்க வேண்டும்.



இந்தியாவை நாம் பகைக்காது அனுசரிக்கும் அதேவேளை, இந்தியாவாலும் நிலைமையை பிராந்திய வட்டத்திற்குள் வைத்திருக்க இயலாத அளவு அதை ஒரு சுயாதீன விசாரணை என்ற உலக மட்டத்



திற்கு கொண்டு செல்லவேண்டும்.

**போர்க்குற்றம் என்பதற்கும் அப்பால் இது இன அழிப்பு விவகாரமாக, உலக அழுத்தத்தை நேரடியாகக் கொழும்பின் மீதும், மறைமுகமாக இந்தியா மீதும் பிரயோகிக்க ஏதுவான வடிவத்தை தற்காலிகமாக வேனும் தமிழ் உலகம் எடுக்கவேண்டும்.** குறிப்பாக தமிழகத்தினூடாக இந்திய மத்திய அரசையும், கனடாவிலிருந்தும் அமெரிக்காவிற்குள்ளிருந்தும் அமெரிக்காவின் அழுத்தத்திற்கும் வலுச்சேர்க்க வல்ல செயற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

**இலங்கை ஒரு தீவு. ஆனால், இரு நாடு என்ற இரட்டை நாட்டுக் கோட்பாட்டிற்கு எதிராகவே இலங்கையும், இந்தியாவும் செயற்பட்டு வருகின்றன.** இரண்டு நாடுகளிலும் தமிழர் இருப்பதால் இந்த நிலையே இன்றுவரை தொடர்கிறது.

**விடுதலைப்புலிகள் பெங்களூரையும் திம்புவையும் டெல்லியையும் தாண்டி மேலெழுப்பி உலக நகரங்களுக்கு கொண்டு வந்த தமிழர்இனப்பிரச்சினையை சார்க் மாநாட்டின் ஊடாகவும், அணிசேரா அமைப்பின் ஊடாகவும், இந்தியாவும் இலங்கையும் முள்ளி வாய்க்காலுக்குள் முடக்கி அழித்தமையே நிஜம்.**

இந்த பிராந்திய மேற்குலகப் போட்டிக்குள் யாருடனும் பகைக்காது இயலுமான அளவு பெற்றுக் கொள்ள, புலம்பெயர் தமிழர்களின் அரசியற் பங்களிப்பு அவசியம். இது இந்திய அக்கறையையும் தாண்டி மேற்குலகின், ஐரோப்பாவின், சர்வதேசத்தின் கரிசனைக்குள் வரவேண்டும் என்பது இன்னும் தேவையான தாகும்.

இந்தியத் தூதுக் குழுவின் தோல்வி நமது வெற்றியா தோல்வியா என்பதை காலமும் நமது அரசியல் இராஜதந்திர நகர்வுகளுமே தீர்மானிக்க வல்லனவாக உள்ளன.

**நன்றி:இணையம்**

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

## இமயம் தொட...




உன் உணர்வுகளின் வழி
உள்ளத்தை மாற்றுவதை விடு
உள்ளத்தின் வழி
உணர்வை மாற்று
நல்லதை நினை
செயற்படுத்து...
யாரும் தொல்லை தந்தால்
கண்களால் சுட்டெரி
நல்லவர்க்கே எதிரிகள் அதிகம்

மாவை நா.கஜேந்திரன்

## நிலா உதிக்கும் போது

நிலா உதிக்கும் போது என் ரகசியம்
களவு போயிருக்கும் என் இருதய ஆடை
களையப்பட்டிருக்கும்!
மெழுகுதிரி ஒளியில் இருட்டு உருக
நான் மண்ணை செரிக்கும் புழுவானேன்!
என் இடிந்த கற்பனைச் சுவர்களுக்குள்
சில பொய்கள் நசிந்து சிணுங்கும்
அது என் உருக்கமான இதயம்
ஓரங்கட்டிய சம்பவங்களாய் இருக்கும்
உன்னில் இருந்து உதிர்ந்த
பொட்டை மறுமுறை ஒட்டும் போது
என் நிலா உதிக்கிறது
நீயும் நானும் நிலா உதிக்..
மலரும் பூக்களோ.......?

எம்.நேதா
நெடுந்தீவு



## அவரவர் பார்வையில்

### இதயத்தின் தவிப்பு

உன்னுடன் உறவாட நினைக்கவில்லை
உன் உயிரின் பகுதியை கேட்கவில்லை
உள்ளத்தின் ஓர் வார்த்தையை
உதடுகளால் கேட்கிறேன்
என் உள்ளம் அறிந்தேனும் கூறுவாயா
உன்னுள் நான் உள்ளேன் என

பொலிகை
விக்னா

### நட்பு

மொட்டுக்கள் மலரத் துடிக்கின்றன
நாளை மலரானால் மரணம்
நிச்சயம் என்பது தெரியாமல்..!
நண்பனும் நட்புக் கொள்ளத்
துடிக்கிறான்- நாளை
நட்புக்கு பிரிவு என்பது தெரியாது...

### நண்பனே..

உன் நிஜமான பேச்சுக்கள் மட்டும்
வெட்டுண்டு.... ஓரிரு
வார்த்தையாய் வருவதேனோ....?
உன் பொய் வார்த்தைகள் மட்டும்
தொடர்கதையாய் நீளுவதேனோ?

புவிலக்ஷி

## அன்னையின் பாசம்

என்னவள் –என்
சுவாசத்தோடு கலந்தவள்
அன்பை நேசிப்பவள் –நல்
அறிவை புகட்டுபவள்
நேசமானவள் என்னில்
மிகவும் பாசமானவள்
மோசமாகப் பேசினாலும்
தோசமாகப் பார்க்கமாட்டாள்
கள்ளம் கபடமற்ற
உள்ளம் கொண்டவள்
சிட்டுக் குருவிபோல்
சிறகடித்து என்னைச்
சுற்றியே வட்டமிடுபவள்
வாழ்க்கை என்னும் வட்டத்தை
கோடிட்டுக் காட்டியவள்
ஒளிதந்த தேவதையாக
என் இதய அறையில்
ஒளிந்திருப்பவள்
மறுபிறவியிலும் என்
அன்பிற்காய் வரம் கேட்பவள்


அ.சுசி
இம்மாஸ் நகர்
அக்கராயன்

## காத்திருப்பு

எல்லாக் காத்திருப்புக் காலங்களிலும்
எமக்குத் தரப்பட்டவை
ஏமாற்றப் பரிசுகளே
மீண்டும் ஒரு காத்திருப்புக்
காலமிதிலாவது கிடைத்திடுமோ
தீர்வு நம்பிக்கையீனமாய்
நகரும் பொழுதிலும்
மனமுண்டு என்றபடி
காத்திருக்கின்றோம்



புலோலியூர்
வேல்நந்தன்



# மௌனத்தின் தேடல் - 119

## விட்டு விடு

மனிதா உனக்குத் தெரியாததா
இருந்தும் சொல்கின்றேன்
கும்பகர்ணனை அறிந்திருப்பாய்
அவன் தன் உடம்பால்
எல்லோரையும் வென்றானா
நீ பெரியவன் தான்
ஒத்துக் கொள்கிறேன்
ஆனால் உன் கோபத்தை
விட்டு விடு
அது உன் இறப்பின்
ஆரம்பநிலை

வர்சினி
முருகமூர்த்தி

## நம்பிக்கை

மலைபோல் மனிதன்
பலம் காட்ட முனைந்தாலும்
பாயும் புலிபோல் நானும்
பாய்ந்தே அடிப்பேன்
பலம் கொண்ட மனிதனை

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

## ஆனைக்கும் அடிசறுக்கும்

பலம் கொண்ட மனிதனே
பந்தயம் யாரோடு
பாலகனின் பலம் உயர்ந்தால்
படுத்திடுவாய் மண்தரையில்
ஆனைக்கும் அடிசறுக்கும்
மறவாதே மனிதா

திருமதி.அ.மேரிஅல்போன்சா
குருநகர்

## வீரம்

மாமிசமலை முன்னால் மாவீரனே
சூரபத்மன் முன்னாலே
முருகனைப் போல்
வீரம் உன் இதயத்திலே
நேர்மை உந்தன் பக்கமானால்
வெற்றி நிச்சயம்
சிறுபான்மை தமிழினமும்
சீறுகின்றபோது இப்படித்தான்
நீ தமிழ்தாயின் புதல்வனா?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## வெற்றிக்கனி

பயமறியாப் பாலகனே
என் பாராட்டுக்கள்
துணிந்து விட்டாய்
துளியும் தயங்காதே
முருக்குப் பெருத்தென்ன
தூணுக்கா உதவும்
முயன்றுபார் முடிவில்
வெற்றிகிட்டும்

ஞா.ஆரணி
கொற்றாவத்தை

## சபாஷ்

இந்தப் பெரிய
மனித மலைக்கு முன்னால்
எந்தவித பயமுமின்றி
என்னாலும் முடியும்
என்ற பாவனையோடு
நிற்கும் இச் சிறுவனின்
துணிச்சலுக்கு ஒரு சபாஷ்

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## தைரியம்

மாமிச மலை மீது மோத
மனதில் தைரியம் வந்தது
உனக்கில்லை வெற்றி ஆனால்
எதிர்த்து மேடையேறிய
தைரியத்தை உலகம் போற்றும்

ச.சிவானுஸன்
நெல்லியடி ம.ம.வி

## துணிந்து நில்

பருத்த உடல் கண்டு
பயந்து விடாதே தம்பி
யானைக்கும் அடி சறுக்கும்
பூனைபோல் நீ இருந்தாலும்
நம்பிக்கையோடு எழுந்து நில்
துணிவோடு அஞ்சாது போராடு
பயிற்சியும் முயற்சியும்
வெற்றி தரும்

துரை
தென்மட்டுவில்

## ஆசைக்கு வயதில்லை

பெரியவருக்கும்
சிறிய ஆசை வரும்
சிறியவருக்கும்
பெரிய ஆசை வரும்
அதனால்
குண்டனும் குழந்தையும்
மல்லுக்கட்டுகிறார்கள்

ராசாவி
அல்வாய்

## ஆயத்தமாகு

உடலின் பலத்தை விட-உன்
உள்ளத்தின் பலமே
உறுதியானது என
உலகிற்கு புரியவைக்க
ஆயத்தமாகு

துஷாந்தி சுதாகர்
கற்கோவளம்

## வலியார் கேட்டால்

பருத்த உடல் மமதையில்
சின்ன சிறுவனை பயமுறுத்துவது
நீதிக்கு புறம்பானது என்று
உன் மனச்சாட்சிக்கு தெரியவில்லையா
தெரியாவிட்டால் தெரிந்து கொள்
வல்லாரை வலியார் கேட்டால்
வலியாரை தெய்வம் கேட்கும் என்ற
வரலாற்றை தெரிந்து கொள்ளப்பா

வ.ச செல்வராசா
திருநாவலூர்

## துணிச்சல்

வெற்றியின் அடையாளம் துணிச்சல்
துணிந்தவர் தோற்றதில்லை
வெற்றியை விரும்பும் நீ
துணிந்து நில்
தயங்கியவர் வென்றதில்லை
ஆனைக்கும் அடிசறுக்கும்
முயல்வதை நிறுத்தாதே
வெற்றி நிச்சயம்

திருமதி.சந்திரன்.தேவி
மானிப்பாய்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -120



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 04.05.2012 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

## அதிசய உலகம்...

# ஒரே நேரத்தில் ஒன்பது குழந்தைகளை சுமக்கும் தாய்



மெக்ஸிகோவைச் சேர்ந்த பெண்ணொருவர் 9 குழந்தைகளை தனது கர்ப்பப்பையில் சுமந்துவருவதாக அந்நாட்டு தொலைக்காட்சியொன்று தெரிவித்துள்ளது.


இவற்றில் 6 பெண் குழந்தைகள் எனவும் 3 ஆண் குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கால்லா வனேஸா பெரஸ் எனும் இப்பெண் மெக்ஸிகோவின் கொஹுலியா மாநிலத்தைச் சேர்ந்தவர். அம்மாநிலத் தலைநகர் சல்டில் லோவிலுள்ள வைத்தியசாலையொன்றில் தற்போது அவர் சிகிச்சை பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மே மாதம் 20 ஆம் திகதி அவர் குழந்தைகளைப் பெறவுள்ளதாக மெக்ஸிகோ அரச செய்தி நிறுவனமான நொட்டிமெக்ஸ் தெரிவித்துள்ளது.

இவர் கருத்தரிப்புச் சிகிச்சையொன்றை செய்து கொண்டதாகவும் இதுவே ஒரே தடவையில் 9 குழந்தைகளை உருவாக வழிவகுத்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அமெரிக்காவைச் சேர்ந்த நாடியா சுலோமான் 2009 ஆம் ஆண்டு எட்டு குழந்தைகளைப் பெற்றார். அதிக குழந்தைகளை ஒரேதடவையில் பெற்ற பெண்ணாக இவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்குழந்தைகள் கலிபோர்னியா மாநில குழந்தைகள் பராமரிப்பு திணைக்கள அதிகாரிகளினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரத்தின் உச்சியில் முட்டை வடிவான வீடு





கனடாவிலுள்ள நபரொருவர் மரமொன்றின் மீது முட்டை வடிவிலான வீடொன்றை உருவாக்கி அதில் வசித்து வருகின்றார். கணனி தொழில்நுட்பவியலாளரான ஜோயல் ஹெலன் எனும் மேற்படி நபர் தச்சராக மாறி மேற்படி வீட்டினை நிர்மாணித்துள்ளார்.

அவர் வீட்டின் ஆயுட்காலம் மற்றும் ஸ்திரத்தன்மை போன்றவற்றுக்காக பல்வேறு மாதிரிகளை வடிவமைத்து பரிசீலித்து பின்னர் இவ்வீட்டினை நிர்மாணித்துள்ளார்.

இவ்வீட்டினை நிர்மாணிப்பதற்கு முன் பொருத்தமான மரமொன்றை கண்டறிவதற்காக ஒரு மாத காலத்தை செலவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவர் நிர்மாணித்துள்ள இவ்வீட்டில் சமயலறை உட்பட அனைத்து வசதிகளும் காணப்படுகின்றன. இவ்வீட்டிற்குச் செல்வதற்கான பாதையும் பலகையினால் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசம் தொடர்பான விவகாரங்கள் குறித்து மன்மோகனுடன் பான் கீ மூன் ஆலோசனை



ஆசிய பிராந்தியத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் மேம்படுத்த இந்தியா மேலும் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் செயலாளர் பான் கீ மூன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியா வந்துள்ள ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு நேற்றைய தினம் டில்லி ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இந்தப் பட்டத்தை பெற்ற மூன் பேசியதாவது,

பிராந்திய அளவிலும் உலக அளவிலும் இந்தியா மிகப்பெரிய சக்தி. அதனால் ஆசிய பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த இன்னும் சிறப்பாக இந்திய அரசு பணியாற்ற வேண்டும்.

பல ஆண்டுகளாக நான் இந்தியாவின் மாணவனாக இருந்தேன். இப்போது பட்டம் பெற்றுள்ளேன். எனது மகன் இந்தியாவில் பிறந்தான். என் மகள் இந்தியர் ஒருவரை மணந்தாள். இந்திய கொரிய நாடுகளின் கூட்டுக் கலப்பாக என் பேரன் பிறந்துள்ளான். இந்தியாவில் இருக்கும் போது என் சொந்த வீட்டில் இருப்பதாகவே உணர்கிறேன். 40 ஆண்டுகளுக்கு பின்னர் நான் இங்கு வந்துள்ளேன். இந்தியாவின் பெருமைமிக்க வரலாறு மற்றும் பாரம்பரியத்தில் இருந்து நான் நிறைய பாடம் கற்றுக் கொண்டுள்ளேன்.

ஒரு பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவாகிக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. அதே நேரத்தில் பிரசவத்தின் போது பெண்கள் இறப்பது மற்றும் தடுக்க முடியாத நோய்களால் குழந்தைகள் இறப்பது போன்றவையும் இங்கு தடுக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். போலியோவை ஒழித்தது போல மற்ற நோய்களையும் இந்தியா ஒழிக்கும் என நம்புகிறேன் என அவர் கூறினார்.

பான் கீ மூன் பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் சந்தித்துப்பேசியுள்ளார். பிரதமர் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது இருவரும் பிராந்திய மற்றும் சர்வதேச அளவி லான பல பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர். பொது சுகாதாரம் மற்றும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சிக்காக இந்தியா எடுத்து வரும் நடவடிக்கைகளை மூன் பாராட்டினார்.

அத்துடன் சர்வதேச அளவில் அதிகரித்து வரும் பயங்கர்வாதம், ஆப்கானிஸ்தான் பிரச்சினை, சிரியாவில் வெடிக்கும் உள் நாட்டுக் கலவரம், சூடான்- தெற்கு சூடான் இடையிலான பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது. (அ-;2)

## பாதுகாப்பு குறித்து ஒப்பந்தங்கள்

அமெரிக்காவிடம் இருந்து 8 பில்லியன் டொலர் அளவுக்கு பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்களில் இந்திய அரசு கையெழுத்திடவுள்ளது.

டில்லியில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் நான்சி பாவெல் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இந்திய அரசு அமெரிக்க நிறுவனங்களுடன் 8 பில்லியன் டொலர் அளவுக்கு பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அப்பாச்சி ரக ஹெலிகொப்டர்களையும் இந்திய ஜெட் விமானங்களுக்கான என்ஜின்களையும் வாங்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. (அ-2)

## சார்க் நாடுகளின் கருத்தரங்கம்

சார்க் உறுப்பு நாடுகளின் தேர்தல் கமிஷனர்கள கலந்து கொள்ளும் மூன்றாவது கருத்தரங்கம் நாளை முதல் மே 2 ஆம் திகதி வரை புதுடில்லியில் நடைபெறுகின்றது. கூட்டத்தில் பாகிஸ்தான், பூட்டான, இலங்கை, வங்கதேசம்,மாலைதீவு, நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்த தலைமை தேர்தல் கமிஷனர்கள் கலந்து கொள்கின்றனர்.

கூட்டத்தில் தேர்தல் நேரத்தில் வாக்காளர்களுக்கு பணம் அளிப்பதை கட்டுப்படுத்துவது நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதாக தேர்தல் கமிஷனின் ஜெனரல் இயக்குனர் அக்சய்ரூத் தெரிவித்தார். சார்க் நாடுகளின் தேர்தல் கமிஷனர்கள் சந்தித்து கொள்ளும் முதல் கூட்டு 2010 ஆம் ஆண்டு மே மாதம் வங்கதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் 2011 இல் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமா பாத்தில் நடைபெற்றது. தொடர்ந்து தற்போது மூன்றாவது கூட்டம் இந்தியாவில் குரோஷி தலைமையில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நான் சட்டத்தை கடைப்பிடித்துள்ளேன்; முடிந்தால் என்னை எதிர்த்துப்பாருங்கள்

## சவால் விடுக்கும் கிலானி

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீது ஊழல் விசாரணைக்கு உத்தரவிட மறுத்ததாக உச்ச நீதிமன்றம் என்னைத் தண்டித்தது சட்டப்படி சரியல்ல. உங்களுக்கு துணிச்சல் இருந்தால் எனக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள் என்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளைப் பார்த்து நேற்றுமுன்தினம் பிரதமர் யூசுப் ரசா கிலானி அறைகூவல் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி பதவியில் இருப்பவர் மீது உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ ஊழல் வழக்குத் தொடர முடியாது என்று பாகிஸ்தானின் அரசியல் சட்டம் பாதுகாப்பு தருகின்றது. அந்தச் சட்டத்தை மீறி அவர் மீது நான் விசாரணைக்கு உத்தரவிட முடியாது. இதற்காக உச்ச நீதிமன்றம் என்னைத் தண்டித்திருக்கவே கூடாது. இந்த நிலையில் தார்மீக அடிப்படையில் நான் பதவி விலக வேண்டும் என்று எப்படி கேட்கிறீர்கள்.

நமது அரசியல் சட்டப்படி நாடாளுமன்ற (மக்களவை) தலைவர் (சபாநாயகர்) தான் பிரதமரை பதவி விலக்க முடியாமல் தகுதியிழப்பு செய்ய முடியும். வேறு யாருக்கும் அந்த அதிகாரம் இல்லை. இதெல்லாம் தெரியாமல் நான் பதவி விலக வேண்டும் என்று கேட்டால் எப்படி? எனக்குத் தகுதி இல்லை என்று கூறும் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியே முன் நின்று எனக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரட்டும்.

எல்லாவற்றுக்கும் அதிகாரங்களை வழங்கும் ஊற்றே நாடாளுமன்றம் தான். எல்லா அரசியல் சட்ட அமைப்புக்களுக்கும் ஆதாரம் இங்குதான் இருக்கின்றது.

என்னை பதவி நீக்கம் செய்வதாக இருந்தால் அதை சாபநாயகரோ தேர்தல் கமிஷனோ தான் செய்ய வேண்டும். 18 கோடி மக்களின் பிரதிநிதி நான். என்னை எப்படி கிள்ளுக்கீரையைப் போல தூக்கி வீசிவிட முடியும். நவாஸ் ஷெரீபை கூடத்தான் ஊழலுக்காக ஒரு நீதிமன்றம் தண்டித்தது. உடனே அவர் பதவி விலக வேண்டும் என்று நாங்கள் (பாகிஸ்தான் மக்கள் கட்சி) கேட்கவில்லையே. நாங்கள்பதவிவிலகி உங்களில் யாராவது இந்த இடத்திற்கு வந்தால் உங்களால் ஒரு நாளைக்கு கூட இந்த நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியாது. அந்த அளவுக்கு உங்களுக்கு தான் என்ற அகங்காரம் இருக்கின்றது. நான் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த நாட்டின் நாடாளுமன்றம் செயற்பட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

எல்லோருடனும் இணக்கமாகப் போக வேண்டும் என்கிற எங்களுடைய அணுகுமுறையை இளிச்சவாய்த்தனமாக எண்ணிவிடாதீர்கள் என்று எச்சரித்தார் கிலானி. (அ-2)

# மேற்குலக நாடுகளில் தொழில்வாய்ப்புக்கள்

## வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை

கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, சுவிஸ்சர்லாந்து, ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளுக்கு இலங்கைப் பணியாளர்களை அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதுகுறித்த ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

பணியாளர்களை அனுப்புவதற்காக சகல நாடுகளுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார தெரிவித்துள்ளார்.

தற்போது 20 இற்கும் அதிகமான நாடுகளில் இலங்கை பணியாளர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். எனினும் அது போதுமானதாக அமையவில்லை.

இதன்படி கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, சுவிஸ்சர்லாந்து போன்ற நாடுகளில் தொழில்வாய்ப்புகளை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நாடுகளில் பொறியியலாளர், விருந்தக தொழில்கள் மற்றும் விமான நிலைய பணிகளில் அதிக வெற்றிடங்கள் இருக்கின்றன.

எனவே, இலங்கைப் பணியாளர்களை சர்வதேச நாடுகளில் தொழில்புரிவதற்கு ஏற்ற வகையில் பயிற்றுவித்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உளநலக் காப்பகத்தை கைதடியில் அமைக்க முடிவு

(சாவகச்சேரி)

உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான காப்பகம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

கைதடியில் மேற்படி காப்பகத்தினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் போரினால் பெரும் எண்ணிக்கையான மக்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உள ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களை வைத்து பராமரிக்கவும் அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாகவும் மேற்படி காப்பகம் அமைக்கப்படவுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களில் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களையும் இக்காப்பகத்தில் வைத்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# சுதேச வைத்தியர்களின் மாநாடு

சுதேச வைத்தியர்களின் மகாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் மன்னார் மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் செல்வமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சி.துரைரட்ணம், கொழும்பு, நாவின்ன- மகரகம தேசிய பாரம்பரிய ஆயுர்வேத வைத்திய நிறுவன வைத்திய நிபுணர் திருமதி விக்கினவேணி செல்வநாதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண வைத்தீஸ்வரா வித்தியாசாலை அதிபர் ஆ.மகேந்திரன், வட இலங்கைச் சுதேச வைத்திய சபைச் செயலாளர் டாக்டர் ஜெ.ஜெயலன் மற்றும் ஆயுர்வேதப் பாதுகாப்புச் சபைகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இம்மகாநாட்டில் சுதேச வைத்தியர்களின் நலன் சார்ந்த விடயங்கள், வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால் சகல மாவட்டங்களிலுமுள்ள ஆயுர்வேத வைத்தியர்களையும் ஆயுர்வேத பாதுகாப்பு சபை வைத்தியர்களையும் கலந்து கொள்ளுமாறு மகாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவினர் அறி வித்துள்ளனர். (அ-9)

# முற்போக்கான கொள்கையே நாட்டின் அபிவிருத்திக்கு தேவை

## கோத்தபாய தெரிவிப்பு

நாடொன்றினதும் அதில் வாழும் மக்களினதும் நோக்கம் முன்னோக்கி செல்வதிலேயே இருக்க வேண்டும் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இலங்கையில் இடம்பெறும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளினதும் எதிர்கால பயணத்தின் மேம்பாடு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் கம்பனித்தெரு மீளமைப்பு செயற்றிட்டம் தொடர்பில் பொதுமக்களை தெளிவூட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பாதுகாப்பு செயலாளர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், உலக வங்கியுடன் இணைந்து எதிர்காலத்தில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள தமது அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டார். (அ-2)

# யாழ்ப்பாண மேதினக் கூட்டத்திற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க் கட்சிகளினால் யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள மேதினக் கூட்டத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதிகளவிலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி.யின் மேதினப் பேரணிகளுக்கு பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக பொலிஸ் கலகத் தடுப்புப் பிரிவினரும் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளனர்.

பேரணிகளில் பங்கேற்கும் நபர்களை கண்காணிக்கும் நோக்கில் சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பேரணிகளில் பாரியளவிலான மக்கள் பங்கேற்பார்கள் என பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (அ-2)

# 691 மில்லியன் ரூபா செலவில் அணைக்கட்டு புனரமைப்பு பணி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் கெயார் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் 691 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் குளத்தின் அணைக்கட்டு ஒரு அடி உயர்த்தப்பட்டு மொத்தம் 25 அடி உயரமாக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. அத்துடன் மூன்று பிரதான நீர்ப்பாசன கால்வாய்களில் 44 கிலோ மீற்றர் நீளத்திற்குமான புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

24 அடி உயர நீர் கொள்ளவை கொண்ட இக்குளமானது போரின்போது சில இடங்கள் பாதிப்புக்களை சந்தித்திருந்த நிலையில் தற்போது இக்குளமானது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ் நடப்பாண்டில் மக்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் விவசாயிகளினதும் மக்களதும் நன்மையைக் கருத்திற் கொண்டு குளத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றபோதும் இப்பிரதேச மக்களின் நன்மைக்காக ஆயிரத்து 200 ஏக்கர் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் அனுமதிக்கப்பட்டு அவ்வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# குற்றப்புலனாய்வுத் திணைக்களம் துமிந்தவிற்கு சார்பாக நடந்து செயற்படுகிறது

## பாரதவின் மகள் குற்றச்சாட்டு

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் துமிந்த சில்வாவுக்கு சாதகமாக நடந்து கொள்வதாக கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிக்கா பிரேமச்சந்திர குற்றஞ்சாட்டியுள்ளார்.

உயிரிழந்த எனது தந்தைக்கு நியாயம் கிடைக்க வேண்டும். என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பு எமக்கு துமிந்த சில்வாவின் உடல் நிலை குறித்து கவலையில்லை. துமிந்த சில்வாவை கைது செய்ய வேண்டுமென்பதே எமது கோரிக்கை.

எத்தனையோ குற்றவாளிகள் வைத்தியசாலையில் பதுங்கியிருந்த வேளையில் கைது செய்த பொலிஸார் ஏன் துமிந்த சில்வாவை மட்டும் கைது செய்யப்படவில்லை என்று கேள்வியெழுப்பினார்.

குற்றப்புலனாய்வு பிரிவினர் அவரை கைது செய்யவோ பிடிவிராந்து பிறப்பிக்கவோ இதுவரை எந்தவிதமான நடவடிக்கையினையும் முன்னெடுக்கவில்லை. புலனாய்வு பிரிவினர் இதுவரை செய்து வந்த விசாரணைகள் அனைத்தும் பொய்யானவை. அவர் இருப்பதாக கூறப்படும் இடம் குறித்தும் எமக்கு தற்போது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## NEWZELANDஇல் உயர் கல்வி

கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் G.C.E. O/L இல் ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் நியூசிலாந்தில் உயர் கல்விகளுக்கு செல்லலாம்.



**தேவையான கல்வித் தகைமைகள்**

G.C.E. O/L ஆறு பாடங்கள் சித்தி
ENGLISH பாடத்தில் சித்தி தேவையில்லை
IELTS பாடநெறி தேவை இல்லை

கட்டணம் முன்பை விட குறைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்த கட்டணத்தில் கல்வியைத் தொடர்வதுடன் படிக்கும் காலத்தில் மாதாந்த சம்பளமாக 1000 டொலர்வரை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் Newzeland நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்வதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் Newzeland இல் குடியேற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:-

RAINBOW TRAVELS & TOURS
113,CHATHAM ST
COLOMBO-01
Tel:-0778980652

(சி/6417)

# பரிந்துரைகளை நிறைவேற்றாது போனால் 15 நாடுகளின் ஆதரவை இழக்க நேரிடும்

## கிரியெல்ல எம்.பி.தெரிவிப்பு

**தமிழ்மக்கள் அனைவரும் விடுதலைப்புலி ஆதரவாளர்களோ அல்லது பிரிவினைவாதத்தை ஆதரிப்பவர்களோ அல்ல என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டு தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

ஜெனீவா பிரேரணைக் கமையநல்லிணக்க ஆணைக் குழுவின் சிறப்பான பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாவிட்டால் அடுத்த எதிர்வரும் ஐ.நா மனிதவுரிமை பேரவை மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய 15 நாடுகளினதும் ஆதரவு கிடைக்காமல் போகுமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய அவர், 2001 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் முதலமைச்சராக பதவியேற்றது தொடக்கம் இன்று வரை ஜெயலலிதா புலிகளுக்கு எதிரான கருத்துக்களையே கொண்டுள்ளார்.

இவரை கொலை செய்வதற்கும் புலிகள் முயற்சித்தனர். இதேபோன்று தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் புலிகளுக்கு ஆதரவான கட்சிகள் அல்ல. எதிரான கட்சிகளும் உள்ளன.

அதேபோன்று தமிழ் மக்கள் அனைவரும் புலி ஆதரவாளர்களோ பிரிவினைவாதத்தை ஆதரிப்பவர்களோ அல்ல. இதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். கருணாநிதி புலிகளையும் பிரிவினைவாதத்தையும் ஆதரிப்பதை வைத்துக்கொண்டு மேற்கண்ட அனைவரையும் ஒரே குவியலில் சேர்க்கலாகாது.

இன்று தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நிச்சயம் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் அரசியல் தீர்வை காண முடியாது.

உள்நாட்டில் எதிர்ப்பு ஜெனீவா பிரேரணையை உள்நாட்டில் எதிர்க்கும் அரசாங்கம் உணர்ச்சிகரமான வசனங்களை பேசி மக்களை ஏமாற்றுகிறது. ஆனால் அப்பிரேரணையில் வலியுறுத்தப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை முன்னெடுப்பதற்காக அரசாங்கம் செயல்முறைத் திட்டத்தை தயாரிக்கின்றது.

இரகசியமாக இத்திட்டத்தை தயாரித்து கொண்ட அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்கா சென்று கிலாரி கிளின்டனை சந்திக்கவுள்ளார். ஆனால் உள்ளூர் பத்திரிகைகளில் ஜெனீவா பிரேரணைக்கு எதிராக கருத்துக்களை அரசாங்கம் வெளியிடுகிறது.

உள்நாட்டில் எதிர்ப்பு. ஆனால் வெளிநாட்டில் ஆதரவு. இதுவே அரசாங்கத்தின் இரண்டு முகமாகும். இன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிடம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நிலையான கொள்கை இல்லை.எனவே அரசாங்கம் எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்பதாக பரிந்துரைகளை முக்கியமானவையான ஜனநாயகத்தை நிலைநிறுத்தல், சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல், மனிதஉரிமைகளை நிலைநாட்டல் போன்ற முக்கியமான விடயங்களை நிறைவேற்ற வேண்டும்.

இல்லாவிட்டால் எதிர்வரும் மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய 15 நாடுகளினதும் ஆதரவு கிடைக்காமல் போகும். அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை எதிர்வரும் காலங்களில் நடத்தவுள்ளது. ஆனால், இத்தேர்தல்கள் நியாயமானதாக நடைபெறாது. சுயாதீன் தேர்தல்கள் ஆணைக்குழுவை நியமித்த பின்னரே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அதன் போதே தேசிய சர்வதேச ரீதியில் அரசாங்கத்திற்கு நற்பெயர் கிடைக்கும்.

(அ-2)

# உங்கள் நாட்டினால் வழங்கப்படும் உதவியில் எங்களையும் கவனியுங்கள்

## யாழ்.முஹம்மதிய்யா ஜும்மா மஸ்ஜித் மன்மோகனுக்கு அறிக்கை

யாழ்ப்பாண முஸ்லிம்களாகிய நாம் 30 வருடங்களாக அரசியல் அநாதைகளாக வாழ்ந்து ஏனையோர் போன்று சொல்லெணா துயரங்களை அனுபவித்தும் தற்போது யுத்தம் முடிந்த பின்னரும் சொந்த வீடுகள் அற்ற நிலையில் நிர்க்கத்தியாக நிற்கிறோம் என யாழ். முகம்மதியா ஜும்மா மஸ்ஜித் தலைவர் எஸ்.ஏ.சி.முபீன் குறிப்பிட்டுள்ளார். இலங்கை வந்து சென்ற இந்திய தூதுக்குழுவின் ஊடாக இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் தற்போதுள்ள யதார்த்தபூர்வமான உண்மை நிலைவரத்தின் தன்மையை அறிந்து கொள்ளும் முகமாக சகல கட்சிகளும் ஒருங்கிணைந்த தூதுக்குழுவினரை அனுப்பியதன் மூலமாக நீங்கள் வெளிப்படுத்திய ஆர்வத்தை இந் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த முஸ்லிம் சமூகங்கள் சார்பாக எமது நன்றிகளையும் உயர்மதிப்பையும் தெரிவித்து கொள்கிறோம்.

தமிழ் தேசிய வாதத்திற்கு உயர்ந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்ட காலகட்டத்திலும்பின்பு உள்நாட்டு போர் நடைபெற்ற போது பாதிக்கப்பட்ட மக்களது வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு எமது அயல் நாடான இந்தியா பிரதான பங்களிப்பை வழங்கியது சம்பந்தமாக ஒரு முக்கியமான குறிப்பை உங்களது அன்பான இரக்ககுணமுள்ள தீர்மானத்திற்கு சமர்ப்பிப்பதற்காக வேண்டி உங்களது அனுமதியை இத்தால் வேண்டி நிற்கிறோம்.

போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகள் பிரதான தமிழர் தாயகமாகவும் தமிழ் பேசும் மக்களான இந்துக்களையும் தமிழ் கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் கொண்டது. வடக்கில் யாழ்ப்பாணத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து 1990 ஆம் ஆண்டு 2 மணித்தியால அவகாசத்தில் அவர்கள் பிறந்து வளர்ந்த இடங்களை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

தமிழ் சமூகத்தை சேர்ந்த பெரும்பான்மையினர் 1995 இல் வெளியேறியும் அவர்களில் பலர் 2 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது பலவிதமான இன்னல்களையும் இழப்புகளையும் சந்திக்க நேர்ந்தது. இந்த விபரங்கள் தற்போது உலகளாவிய ரீதியில் உணரப்பட்டும் உள்ளது.

ஐயா!யாழ்ப்பாண முஸ்லிம்களாகிய நாங்கள் நாடாளுமன்றத்தில் முறையான பிரதிநிதித்துவம் இன்றி கடந்த 30 வருடங்களாக அரசியல் அநாதைகளாக வாழ்ந்து ஏனையோர் போன்று சொல்லெணா துன்பங்களை அனுபவித்தும் தற்போது யுத்தம் முடிந்த பின்னர் தாம் பிறந்து வளர்ந்த இடங்களுக்கு திரும்பியபோது கிட்டத்தட்ட அவர்களது சொந்த வீடு வாசல்கள் அனைத்தும் சூறையாடப்பட்டு இயற்கையின் அழிவுகளுக்கும் உள்ளாகி வாழ்வதற்கும் பொருத்தமற்ற சூழ்நிலை காணக்கூடியதாக உள்ளதை இங்கு குறிப்பிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளமைப்பதற்கு உங்கள் நாட்டினால் வழங்கப்படும் உதவிகளில் வடகிழக்கை சார்ந்த முஸ்லிம் சமூகத்தை தமிழ் தேசியத்தின் ஒரு பகுதியாக இனங்கண்டு அவர்களுக்கும் நியாயமாக கிடைக்கக்கூடிய பங்களிப்பை வழங்கும் படி இத்தால் தாழ்மையாக வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது.

(அ-2)

# ஓராண்டு காலத்தில் 25 ஆயிரம் புலத்தவர்கள் வடக்கு, கிழக்கிற்கு

கடந்த ஒரு ஆண்டு காலப்பகுதியில் சுமார் 25 ஆயிரம் பேர் புலம்பெயர் தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்துள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

உறவினர்களை பார்வையிடுதல், சொத்துக் கொள்வனவு, சொத்து பராமரிப்பு, சுற்றுலா என பல்வேறு நோக்கங்களுக்காக இவ்வாறு புலம் பெயர் தமிழர்கள் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளனர்.

கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் ஸ்கென்டினேவிய நாடுகளை சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களே அதிகளவில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

எவ்வாறெனினும் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்யும் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகள் கண்காணிக்கப்படுவதில்லை என இராணுவ பேச்சாளர் ருவான்வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

(அ-2)

# தபால் விநியோகத்தை சீர்படுத்த கோரிக்கை

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள பிரமந்தனாறு, கல்லாறு, மயில்வாகனபுரம் ஆகிய கிராமத்தை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தபால் சேவை சீரான முறையில் நடைபெறுவதில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

தமக்குரிய கடிதங்கள் சீரான முறையில் கிடைப்பதில்லை என அப்பகுதி மக்கள் உரிய தரப்பினரிடம் பல்முறை முறைப்பாடு செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இம்மக்கள் தமக்குரிய கடிதங்களை தருமபுரம், விசுவமடுகுளம் ஆகிய உபதபாலகங்களுக்கு சென்றே பெற்றுக்கொள்ள வேண்டிய அவலநிலை உள்ளது.

எனவே,உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு தபால் சேவ்வயை சீரான முறையில் பெறுவதற்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ-3-264)





முள்ளியவளை பிரதேசத்தில் நீர்போ அமைப்பினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பாரதி இல்லம் நேற்று முன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நீர்போ அமைப்பின் தலைவர் கே.பி.என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன், முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதியின் இணைப்பாளருமான சதாசிவம் கனகரட்ணம், வடமாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் விஸ்வரூபன், முல்லை. மாவட்ட சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் விக்னராஜா, முள்ளியவளை இராணுவ கட்டளைத் தளபதி கேணல் மதநாயக்க ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் கட்டடம் திறந்து வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

பெரிய விடயங்களைப் போலவே சிறிய விடயங்களையும் கவனிக்கக்கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும். –டாக்டர் ஜான்ஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஆழ ஊடுருவும் போதைவஸ்து விழிப்பின்றேல் அழிவு

வன்னி யுத்தத்திற்கு முன்னதாக அந்தப் பெருநிலப்பரப்பு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

போருக்கு முன்னதாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சில தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

அந்தத் தாக்குதல் ஆழ ஊடுருவும் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப் புலிகளால் தெரிவிக்கப்பட்டது.

இறுதி யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் துடிதுடித்துப் பலியாகிப் போவதற்கும் இந்த ஆழ ஊடுருவும் படையே காரணம் எனலாம்.

அப்படியானால் ஆழ ஊடுருவும் படை எப்படி [illegible]களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்தது என்ற கேள்வி எழுமாயின், புலிகளுக்குள் இருந்த ஒற்றர்களே அதற்குக் காரணம் எனலாம்.

இவை போரினால் தமிழ் இனத்தை அழித்த வரலாற்றில் ஆழ ஊடுருவும் படையின் பங்கைக் குறிப்பதாகும்.

இப்போது ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழிக்கும் நோக்குடன் போதைவஸ்து என்ற ஆழ ஊடுருவும் படை எங்கள் வடபுலத்தில் நுழைந்து விட்டது.

எங்கள் இனத்தில் இருக்கக்கூடிய– போதைவஸ்தின் அழிவைப் புரியாத–ஒரு சிறு தரகுப் பணத்திற்காக விலைபோகும் வஞ்சகர்கள் போதைவஸ்தின் நுழைவுக்கு உறுதுணையாக இருக்கின்றனர்.

[illegible]ாதைவஸ்து பாவனை வடக்கில் அதிக[illegible]த்து விட்டால் எந்த வீடுமே நிம்மதியாக உறங்க முடியாது.

எங்கும் வன்மங்கள் மலிந்துபோகும். பாலியல் துன்புறுத்தல்கள், அடாவடித் தனங்கள் தலைவிரித்தாடும்.

மண் மீட்புக்காகப் போரிட்ட ஒரு இனம் போர் முடிந்து மூன்று ஆண்டுகளில் போதைப் பாவனையால் சின்னாபின்னப்பட்டு சீரழிந்து போனதென்ற வரலாறே மிஞ்சிக் கொள்ளும்.

அதிலும் வடக்கில் ஆழ ஊடுருவியுள்ள போதைப் பொருள் பாவனையில் மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவலால் கிறுதி வருகிறது.

ஆ! கடவுளே, எங்கள் மாணவச் செல்வங்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையா? இதனை அடியோடு அழிக்க மக்கள் தயாராவது காலத்தின் கட்டாய தேவை.

அதேநேரம் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு நீதி பரிபாலனம் கடும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இக் குற்றவாளிகள் தொடர்பில் சட்டத் தரணிகள் நிதானமாகச் செயற்படுவது அவர்களின் தார்மீகப் பொறுப்பு.

அன்புக்குரிய தமிழ் இளைஞர்களே!

நீங்கள் நினைத்தால், ஒரு இரவுப் பொழுதோடு போதைப் பொருளை எங்கள் மண்ணில் இருந்து அடியோடு அழிக்கவும் அதன் விற்பனையாளர்களை சிறைக்குள் முடக்கவும் முடியும். தயாராகுங்கள்.

# ஹெரோயின் கடத்தல் கும்பல் பொலிஸாரிடம் சிக்கியது!

பல வருடக்கணக்கில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்த கும்பலைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களினை யாழ். விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் தமது கடத்தல்கள் உட்பட அனைத்து நடவடிக்கைகளினையும் மேற்கொண்டு வந்ததோடு பெரும் எடுப்பிலான அடிதடிகளிலும் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

ஹெரோயின் கடத்தலின் முக்கிய சூத்தரதாரி விசேட அதிரடிப்படையினரால் தேடப்பட்டுவந்த நிலையில் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் குறித்த நபர் மானிப்பாய் வீதி ஆறுகால்மடத்தினை அண்மித்த வீடொன்றில் பதுங்கி இருப்பதாக கிடைத்த புலனாய்வுத் தகவலின்படி குறித்த இடத்திற்கு சென்ற விசேட படை குறித்த இளைஞரை நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் நடைபெற்ற விசாரணைகளின் மூலம் மேலும் நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கும்பல் பல வருடங்களாக இவ்வாறான போதைப்பொருள் கடத்தல், அடியாட்களினை வைத்து வெருட்டுதல், இரும்புக் கடத்தல் மற்றும் சிலர் களவுகளிலும் ஈடுபட்டு வந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.(எ–4)

# பாராட்டு விழா

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சோனகதெரு, இல.171, முஸ்லிம் கல்லூரி வீதியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.ஏ.ரஹீம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.இடம்பெயர்ந்தோர் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.ராஜநாயகம் கலந்து கொள்வார். (அ–9)

# டிப்பர் சாரதி மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

கனகராயன் குளத்திலிருந்து கிரவல் மண் ஏற்றிக் கொண்டு சென்ற டிப்பர் வாகன சாரதி ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளார்.


டிப்பர் வாகனத்தில் ஏறுவதற்காக இராணுவத்தினர் மறித்தபோது நிற்காமல் சென்றதைக் காரணம் காட்டியே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேபோன்று சாரதிகள் மீது தேவையற்ற காரணங்களை கூறி இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ–85)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### இன்பம் முப்பது

சுழி முனைக்குள் ஒடுங்குதல் இன்பமே
சோதி ரூபத்தைக் காணுதல் இன்பமே
பழியும் பாவமும் நீக்குதல் இன்பமே
பதியி யேலயிளைப் பாறுதல் இன்பமே
வெளியி லேயொளி காணுதல் இன்பமே
விண்ணைப் போல விளங்குதல் இன்பமே
ஒழிக உன்பாவம் என்ன உரைத்திட்ட
ஒருமை சேர்குரு புங்கவ சிங்கமே!



# சாதிக்கவேண்டியதும் பிறருக்காய் வாழ வேண்டியதும் நிறைய உள்ளன

நானே நல்ல ஆயன் என்று இயேசு கூறும் பகுதியை இன்று நற்செய்தியில் பார்க்கின்றோம். பலதரப்பட்ட மக்களையும் வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் கவர்ந்த ஓவியம் இயேசு நல்லாயனாக சித்தரிக்கப்பட்ட ஓவியமேயாகும். இயேசு தமக்குத் தாமே வைத்துக்கொண்ட பெயர்களில் ஒன்றுதான் ஆயன். மண்ணகத்தாருக்காக மரித்து, உயிர்த்த இயேசுவின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் இந்நாட்களில் நல்லாயனாம் இயேசுவைப்பற்றி தியானிப்பது சாலச்சிறந்ததாகும்.

நானே நல்ல ஆயன் என்று இயேசு கூறும்போது யார் இங்கு ஆடுகள்? என்ற கேள்விக்கு பதில் காணவேண்டியது கட்டாயமாகிறது. நாம் தான் அந்த ஆடுகள். எனவே ஆடுகளின் குணநலன்களைப் பற்றியும் அறிவது இங்கு அவசியமாகிறது. ஆடுகள் ஒன்றையொன்று சார்ந்து கூட்டமாக வாழும். சுயமாகச் செயற்படாது, வழிதவறிவிடும். ஒன்றை ஒன்று எப்போதும் பின் தொடரும். மிக்வும் பலவீனமானவை.


## பரமபிதா காட்டிய பாதை

இங்கு இயேசு தம்மை ஒரு நல்ல ஆயராக எவ்வாறு முன்னிலைப்படுத்துகிறார். இயேசு எவ்வாறு நல்ல ஆயனாக செயற்படுகிறார் என்பது பற்றி சிந்தித்தால் இயேசு தம் மந்தையை நன்கு அறிந்து, பாதுகாத்து முன்நின்று வழிநடத்தித் தம் ஆடுகளாகிய எமக்காக உயிரைக்கொடுக்கும் நல்லாயனாக செயற்படுகின்றார் என்பது தெளிவாகும்.

இன்றைய நாள் திருச்சபையில் நல்லாயன் ஞாயிறு என்றும் உலகளாவிய இறை அழைத்தல் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறது. நல்லாயனின் ஒரு முக்கியமான குணம் ஆடுகளுக்காகத் தன்னுயிரையே கொடுப்பது.

இந்த இடத்தில் நல்லாயன், இறையழைத்தல் என்ற இரு எண்ணங்களையும் இணைத்துச் சொல்லப்பட்டுள்ள ஒரு உண்மைச் சம்பவத்தை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். கொரியாவில் நடந்துவந்த போரின் உச்சக்கட்டம். போரில் காயப்பட்டு, உயிருக்குப்போராடி வந்த ஒருவீரன், தான் இறப்பதற்கு முன் ஒரு குருவைச் சந்திக்கவேண்டுமென்ற தன் ஆவலை வெளியிட்டான். அவனுக்கு மருத்துவ உதவிகள் செய்தவர் திகைத்தார். இந்தப் போர்க்களத்தில் குருவுக்கு எங்கே போவது? என்று அவர் தடுமாறிக் கொண்டிருந்தபோது, அந்தவீரனுக்கு அருகில் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த மற்றொருவர் நான் ஒரு குரு என்று தன்னையே அறிமுகப்படுத்தினார். அவரது நிலையைக் கண்ட மருத்துவர் நீங்கள் அசையாதீர்கள். அசைந்தால் உங்களுக்கு உயிருக்குப் பெரும் ஆபத்து என்று அந்தக்குருவிடம் எச்சரித்தார். அதற்கு அந்தக்குரு நான் வாழப்போகும் இந்த ஒரு சில மணித்துளிகளைவிட என் நண்பரின் ஆன்மா மிகவும் முக்கியம் என்று சொன்னபடி தன்னிடம் எஞ்சியிருந்த சக்தியை எல்லாம் திரட்டி தரையோடு தரையாக ஊர்ந்து வந்தார் அந்தக்குரு. சாகும் நிலையில் இருந்த அந்த வீரனின் இறுதி நேரத்தில் அவனுக்கு ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கினார். அந்த வீரனும் குருவும் அமைதியாக இறந்தனர்.

சாதிக்க வேண்டியதும் பிறருக்காய் வாழவேண்டியதும் நிறைய உள்ளன. சொற்கள் கடந்த சிந்தனை, தன்னலம் தாண்டிய வாழ்வு, சான்றுபகரும் உண்மை இவையே பிறர் நம்மை நோக்கி வரச் செய்யும் காரணிகள் எனலாம்.



சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் உள்ள மக்களை முன்னேற்றும் வழிகளைக் குருக்கள் தீர ஆய்வு செய்து நன்னெறிகளின் அடிப்படையில் திட்டமிட்டு பணிபுரிவ தன்மூலம் நிலையான நீடித்த முன்னேற்றத்தை மனித சமுதாயத்தில் கட்டியெழுப்ப முடியும். இவையெல்லாம் செயலாக்கம் பெற்றால் நல்ல குருக்கள் நம்மை வழி நடத்துவர். இதற்கு நாம் அனைவரும் செய்யக்கூடிய மிக எளிதான உதவி செப உதவிதான்.

எனவே இயேசுவைப்போல திருச்சபையை வழிநடத்த நல்ல ஆயர்கள் உருவாகி உழைக்க உயிர்த்தமாட்சிமிகு இயேசுவிடம் உம்மைப்போன்ற நல்ல மேய்ப்பவர்களை எங்களுக்குத்தாரும் என்று பணியாற்றும் குருக்களுக்காகவும் வருங்காலக் குருக்களுக்காகவும் தவறாமல் செபிப்போம். நல்லாயனாம் இயேசுவைப்போல் மக்கள் பணிக்குத் தங்களையே அளித்த பணியாளரை இறைவன் வழிநடத்த வேண்டுமென்று இவ் இறையழைத்தல் ஞாயிறன்று மன்றாடுவோம்.

ம. பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# குடிமகன்களுக்கு 7000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதியில் நின்று கொண்டு வீதியில் பயணிப்போர்களுக்கு இடையூறு விளைவித்த இருவருக்கு யாழ். நீதிமன்றம் ரூபா 7 ஆயிரம் அபராதமாக விதித்துள்ளது.

வட்டுக்கோட்டையினை சேர்ந்து இருவர் யாழ். பஸ்நிலையத்திற்கு அருகில் வீதியால் செல்வோரிடம் சேஷ்டை புரிந்துள்ளார்.

குறித்து இருவரினையும் கைது செய்த யாழ். பொலிஸார் யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தினர். வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் மா.கணேசராஜா குறித்த இருவருக்கும் 7 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்தார். (அ-4)

# இலவச கண் சிகிச்சை முகாம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மை கருதி வடமாராட்சி லயன்ஸ் கழகத்தினரால் கண் சிகிச்சை முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இலவச கண் பரிசோதனையும் இலவசமாக மூக்குக்கண்ணாடியும் வழங்கப்படவுள்ளன. (அ-3-64)

# கிளி.மகாதேவ சிறுவர் இல்லத்திற்கு 50 இலட்சத்தில் கட்டடம் அமையும்

## யாழ்.வணிகர் கழகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மகாதேவ சைவர் சிறுவர் இல்லத்திற்கு யாழ். வணிகர்களின் உதவியுடன் வணிகர்கழகம் 50 இலட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியுடைய கட்டடம் ஒன்றினையும் வாழ்வாதார உதவிகளினையும் வழங்கவுள்ளதாக யாழ். வணிகர் கழகத் தலைவர் தெரிவித்தார்.**

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் ஆண்டு அறிக்கை சமர்ப்பித்தலும் நேற்றுக் காலை யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திலேயே மேற்படி சிறுவர் இல் லத்திற்கு நிதி வழங்குவது தொடர்பாக ஆரா யப்பட்டது.வணிகர்களாகிய நாம் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் சமூகத்தினையும் எமது சமூகத்தினையும் கட்டியெழுப்ப வேண்டிய பொறு ப்பு அல்லது நிர்ப்பந்தம் எமக்குள்ளது.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 150 வறிய குடும்பங்களுக்கு 4 ஆயிரத்து அறுநூறு கோடி ரூபாயும் கிளிநொச்சியில் 60 குடும்பங்களுக்கு ஆயிரத்து 800 கோடி ரூபாவும் வாழ்வா தாரத் தொகையாக வழங்கியுள்ளோம்.

போர் முடிந்த பின்னரும் எமது மக்கள் சமூகம் தன்னிறைவை அடையவில்லை செல்வந்தர்களும் வறியவர் என்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

நாம் இதுவரை செய்து வந்த உதவிகளினை விட குறித்த சிறுவர் இல்லத்திற்கு செய்யும் உதவியானது எமது சமுதாயத்தினை மேலும் வலுப்படுத்தும்.

இச்சிறுவர் இல்லத்தில் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டு உடலில் துப்பாக்கி சன்னங்களினை சுமந்து கொண்டும் மண்டையோட்டின் ஒரு பகுதி இல்லாமலும் போரில் அரை உயிரிலிருந்து மீட்கப்பட்ட குழந்தைகளும் இங்கு பராமரிக்கப்படுகின்றனர்.

இவர்களுக்குரிய நிதி முறிகண்டிப்பிள்ளையார் கோவினால் வழங்கப்பட்டு வந்த போதும் அக்கோயிலினையும் அரசு பொறுப் பேற்றுள்ளதால் தற்போது அந்நிதியும் சிறுவர் இல்லத்திற்கு வழங்கப்படுவதில்லை.

இக்குழந்தைகளுக்கு பால் மாவிற்காக ஒவ்வொரு மாதமும் இரண்டரை இலட்சம் ரூபாவும் ஏனைய செலவாக ஒவ்வொரு மாத மும் 19 இலட்சம் ரூபா செலவிடப்படுகின்றது.

தற்போது அங்கு முதல் தேவையாக வதிவிடப்பிரச்சினையுள்ளது. அதனையே நாம் அமைத்துக் கொடுப்பதாக உறுதியளித் துள்ளோம்.

இக்கட்டடத்திற்காக தற்போது 40 இலட்சம் வரையில் யாழ். வணிகர்கள் சிலர் தருவதாக உறுதியளித்துள்ளனர். மேலதிக தொகை யினை மற்றைய வணிகர்கள் முன்வந்து வழங்க வேண்டும்.

வணிகர்களாகிய நாம் தனியே வணிகத் தோடு நின்று விடாது எமது மக்களினையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர் இல்லத்தில் இரண்டு வயது தொடக்கம் 16 வயதுடைய சிறுவர், சிறுமிகள் 314 பேர் வரையில் உள்ளனர். (அ-4)

# அமைதியான தீர்வு வேண்டி முஸ்லிம் மக்கள் துஆ

தம்புள்ள முஸ்லிம் பள்ளிசாவல் விவகாரத்திற்கு அமைதியான தீர்வு கிடைக்க வேண்டும் என வேண்டி நேற்று முன்தினம் ஜும்ஆ தொழுகையின் பின்னர் நாடு பூராகவும் உள்ள சகல பள்ளிவாசல்களிலும் அமைதியான துஆ பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

தம்புள்ள ஹைறிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற சம்பவத்தையடுத்து முஸ்லிம்கள் அனைவரும் பொறுமை காத்து துஆ பிரார்த்தனையில் ஈடுபடுமாறு உலமா சபை இலங்கை முஸ்லிம் கவுன்ஸில் மற்றும் முஸ்லிம் அமைச்சர்கள், எம்.பிக்கள் கூட்டாக கோரியிருந்தனர். இதன்படியே சகல பள்ளிவாசல்களிலும் அமைதியான துஆ பிரார்த்தனைகள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

இதில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர். (அ-2)

# ஐ.நா. ஹெடிடாட் அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்



யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்காக ஆயிரத்து 121 வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க ஐ.நாவின் ஹெடிடாட் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக கராச்சி, அக்கராயன்குளம் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 3 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான மேற்படி வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் ஹெடிடாட் அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பயனாளிகளிடம் வீடுகளைக் கையளிப்பதை படத்தில் காணலாம். (அ-2)

# புலித்தோலும் காணிக்கையா?

முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு புலித்தோல் ஒன்றை காணிக்கையாக செலுத்த தயாராகிய நபர் ஒருவரை வன வளப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சுமார் எட்டு அடி நீளமான புலியொன்றின் தோலைக் குறித்த நபர் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர் அரசியல்வாதி ஒருவருக்கு நெருக்கமானவர் என தெரியவந்துள்ளது.

புலித்தோலை காணிக்கையாக குறித்த நபர் கோயிலுக்குச் சென்றிருந்த போது வேறும் கருமம் ஒன்றுக்காக வனவள அதிகாரிகள் கோயிலுக்கு சென்றிருந்த காரணத்தினால் சந்தேக நபரை கைது செய்ய முடிந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# தெற்காசிய நாடுகள் ஊழலால் நிறைந்துள்ளன

தெற்காசிய நாடுகள் ஊழல், பயங்கரவாதம் மற்றும் வறுமை என்பவற்றினால் மிக மோசமாக தாக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் எயார் சீஃப் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவின் பண்பாடு, கலாசாரங்கள், வரலாற்றுச் சின்னங்கள் என அனைத்தையும் பாதுகாப்பதில் பயங்கரவாதம் பெருந்தடையாகவுள்ளது. பாகிஸ்தான் பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்கு அரசு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என தெரிவித்தார்.

பாகிஸ்தானில் பல பண்டைய புத்த தலங்கள் உள்ளமையானது இலங்கை சகோதர, சகோதரிகளை பாகிஸ்தான் மக்கள் எந்தளவிற்கு விரும்புகின்றனர் என்பதைக் காட்டுகின்றது. (அ-2)

# பிரதேச செ. பிரிவுகளுக்கு வாவிகள் வழங்கத் திட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் வாவியினை அமைத்துக் கொடுப்பதற்கு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மக்களின் நீர்த்தேவையினை கருத்திற் கொண்டு இந்தத் திட்டத்தை செயற்படுத்த எண்ணியுள்ளதாக அவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 114 பிரதேச செயலர் பிரிவுகளில் வாவி அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சென்னை அணி போராடித் தோல்வி

ஐ.பி.எல் போட்டித் தொடரின் 37-வது லீக் ஆட்டம் சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டேவிட் ஹசி தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பாட்டம் செய்வதாக அறிவித்தது. அதன்படி அந்த அணியின் துவக்க வீரர்களாக ஷோன் மார்ஷ் மற்றும் மன்தீப் சிங் ஆகியோர் களமிறங்கினர்.

அதிரடி காட்டிய ஷோன் மாரஷ் 32 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அசார் மஹ்மூத் தன் பங்கிற்கு 18 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து மன்தீப்சிங்குடன் டேவிட் மில்லர் ஜோடி சேர்ந்தார். டேவிட் மில்லர் 19 ஓட்டங்களில் ஆட்டமிழக்க சிறப்பாக ஆடிய மன்தீப் சிங் 56 ஓட்டங்கள் எடுத்தபோது ஆட்டமிழந்தார்.மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் வீழ்ந்தனர்.

பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை எடுத்தது. சென்னை அணி சார்பில் அல்பி மோர்கல் 3விக்கெட்டுக்களையும், பிராவோ 2 விக்கெட்டுக்களையும், குலசேகர ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி களமிறங்கியது.

துவக்க வீரர்களாக டு பிளிசிஸ் மற்றும் பத்திரிநாத்தும் களமிறங்கினர். அதிரடி காட்டிய பிளிசிஸ் 29 ஓட்டங்களும், பத்திரிநாத் 25 ஓட்டங்களும் எடுத்து அசார் மஹமூத் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். அடுத்துவந்த சுரேஷ் ரெய்னா 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்ட மிழந்தார்.

அடுத்து ஆட வந்த விரித்திமான் சஹா 7ஓட்டங்கள், தோனி ஒரு ஓட்டம் என ஆட்டமிழந்தனர். ஜடேஜா தன் பங்கிற்கு 17 ஓட்டங்கள் எடுத்த ஆட்டமிழந்தார். கடைசி நேரத்தில் நம்பிக்கை அளித்த பிராவோ 30 ஓட்டங்களிலும் அல்பி மோர்கலும் 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இவர்களையடுத்து குலசேகரவும் அஸ்வினும் ஜோடி சேர்ந்தனர். கடைசி ஓவரில் 17 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையிருந்தது. கடைசி ஓவரை அசார் மஹ்மூத் வீசினார். முதல் பந்தில் மோர்கலை வீழ்த்தினார். 2-வது பந்தில் ஒரு ஓட்டம் விட்டுக் கொடுத்தார். மூன்றாவது பந்தை எதிர்கொண்ட அஸ்வின் பவுண்டரி அடித்தார். 4-வது பந்தில் ஒரு ஓட்டம் மட்டுமே எடுக்க முடிந்தது. ஐந்தாவது பந்தை குலசேகர எதிர்கொண்டார். வைட்டாக வந்த பந்தில் ஒரு ஓட்டம் ஓடி எடுத்தார். ஆனால் நடுவர் அந்த பந்தை பைஸ் என அறிவித்தார். இதனால் கடைசிப் பந்தில் 10 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கடைசிப் பந்தில் அஸ்வின் 2 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் பஞ்சாப் அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக பஞ்சாப் அணியின் மன்தீப் சிங் தேர்வு செய்யப்பட்டார்.

## போர்க் குற்ற...

இருப்பதாகவும் குற்றம் சாட்டின.

இலங்கை அரசுக்கு எதிராக சமர்பிக்கப் பட்[illegible]ாக்கல் இந்தக் குற்றச்சாட்டுக்களை நி[illegible]பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்று அரச தரப்பில் கூறப்பட்டது. ஆனாலும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் அனைத்தையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் தனித்தனியாக ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்கள் குற்றமிழைத்திருக்கின்றார்களா என்பதைக் கண்டறிந்து அதற்கான ஆதாரங்கள் இருப்பின் அவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கும் இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர்.

இலங்கைப் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்கோ பொது மக்களை துன்புறுத்தியதற்கோ ஆதாரங்கள் இருந்தால் இலங்கை இராணுவத் தளபதிக்கு எவரும் நேரடியாக முறைப்பாடு செய்யலாம். அது பற்றி விசாரணை நடத்தப்பட்டு அந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையானால் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும். ஆதாரமற்ற வெறும் குற்றச்சாட்டுக்[illegible]ளின் மீது இலங்கை அரசாங்கத்தினால் [illegible]டவடிக்கையும் எடுக்க முடியாது. ஆதார[illegible]மான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக [illegible]பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டு மூன்று மாதங்கள் தான் ஆகியுள்ளன. இந்நிலையில் இலங்கை அரசாங்கம் அதனை நடை முறைப்படுத்தத் தவறியுள்ளது என்று குற்றம் சாட்டுவது நியாயமற்றது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (எ-11)




## மே தினக் கூட்ட...

தொடர்பில் தமிழ்த் தேசியவாத நண்பர்கள் சில விமர்சனங்களை முன்வைத்துள்ளார்கள். இந்த நடவடிக்கை தமிழ்த் தேசியத்தை சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் செயல் என்றும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தை திறந்து விடும் நடவடிக்கை என்றும் எம்மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

விமர்சனங்களை முன்வைக்கும் தமிழ்த் தேசியவாத நண்பர்களை நான் மிகவும் மதிக்கின்றேன். அவர்கள் இதை நல்ல எண்ணத்திலேயே முன்வைக்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் ஐ.தே.க. யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில், கலந்து கொள்வதன் மூலம் யாழ். மக்கள் ஐ.தே.கவிற்கு கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு வழங்க ஆரம்பத்து விடுவார்கள் என்று நான் நம்பவில்லை. ஐ.தே.கவிற்கு கடந்த காலங்களில் கண்ணை மூடிக்கொண்டு வழங்கிய ஆதரவை தமிழ் மக்கள் இன்று கொழும்பிலேயே வழங்கவில்லை.

தமிழ்த் தேசியவாத அணியினரின் ஆதரவுடனும், முற்போக்கு சிந்தனை கொண்ட சிங்கள அணியினரின் துணையுடனும் அதை நாம் கடைசியாக கொழும்பு மாவட்டத்தில் நடந்த தேர்தலில் நிரூபித்துக் காட்டியுள்ளோம். இன்று கொழும்பு மாநகர சபையை எமது ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவு மூலமாகவே ஐ.தே.க. கொண்டு நடத்தும் சூழலை தமிழ் மக்கள் ஏற்படுத்தி உள்ளார்கள்.

யாழ்பாணத்தில் நடக்கவுள்ள மே தினக் கூட்டம், ஐ.தே.க. கூட்டமல்ல. ஐ.தே.கவுடன் மாத்திரம் இணைந்து மே தினக் கூட்டம் நடத்தும் தேவை எமக்கு கிடையாது. இது ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமசமாஜக் கட்சி,ஐக்கிய சமவுடமை கட்சி ஆகிய கட்சிகளுடன், வடக்கின் தலைமைக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்குபற்றும் பொது எதிரணி நிகழ்வாகும்.

தென்னிலங்கையில் நாம் நடத்திய பொது எதிர்க் கட்சிப் போராட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. கலந்து கொண்டார். இத்தகைய ஒரு பொது எதிர்க் கட்சி நிகழ்வையே நாம் தற்சமயம் வடக்கிற்கும் விரிவு படுத்த விழைகிறோம்.

# கொல்கத்தாவிடம் தோற்றது பெங்களூர்


(கொல்கத்தா)

ஐ.பி.எல் போட்டித் தொடரின் 38 வது லீக் ஆட்டம் கொல்கத்தாவில் நேற்றிரவு நடைபெற்றது.

இதில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் டானியல் விக்டோரி தலைமையிலான றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது. அதன் படி அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக கவுதம் காம்பீரும் பிரண்டன் மக்குலமும் கள மிறங்கினர்.

அவர்களின் அதிரடி ஆட்டத்தால் கொல்கத்தா அணி 20 ஓவர் முடிபில் 190 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடின இலக்கை விரட்டிய பெங்களூருக்கு ஆரம்பமே அதிர்ச்சியானது. 20 ஓவர்கள் முடிவில் 143ஓட்டங்களையே பெங்களூரால் பெற முடிந்தது. இதனால் கொல்கத்தா 47 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக காம்பீர் தேர்வானார்.

## கொத்தணிக்...

கண்டுபிடித்துள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபை யின் நிலக்கண்ணி அகற்றும் நிபுணர் அலன் போஸ்டனை மேற்கோள்காட்டி இவ்வூடகம் இச் செய்தியை வெளியிட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது படைத்தரப்பினரால் கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக அரசாங்கம் மறுத்து வந்த நிலையில் போரில் இக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை ஐ.நா நிபுணர்கள் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பகுதியிலேயே இந்தக் கொத்தணிக் குண்டுகள் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டிருந்தன. 2010 ஆம் ஆண்டு கொத்தணிக் குண்டுகளின் பாவனை சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான ஒப்பந்தத்தில் பல நாடுகள் இதுவரை கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இலங்கை விஜயம்...

இதுகுறித்து ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர் ஸதானிகர் திருமதி நவநீதம்பிள்ளையின் காரியாலய பேச்சாளரொருவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், இத்தகைய விஜயமொன்று இதுவரையில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எமது காரியாலய சக பணியாளர்களிடம் இது குறித்து விசாரித்த வகையில் மேற்படி துதுக் குழுவின் இலங்கைக்கான விஜயமெதுவும் அடுத்த வாரம் இடம்பெறாதென்பதை எம்மால் உறுதியாகக் கூற முடியும் எனக் குறிப்பிட்டார்.

இதேசமயம் இலங்கைக்கு விஜயம் செய்யத் தான் தயாராக இருப்பதாக நவநீதம் பிள்ளை இதற்கு முன்னர் கூறியிருந்தார். ஆயினும் இந்த விஜயம் குறித்த திகதியை அவரது காரியாலயமே இன்னமும் நிர்ணயிக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-11)

## பாணின் விலை...

கின்றது.

பாணின் விலை அதிகரிப்புத் தொடர்பான பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் கூட்டம் நேற்றிரவு நடைபெற்றது. இதன் போதே விலை அதிகரிப்பு தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

கோதுமை மாவின் விலை கிலோ ஒன்றுக்கு 8 ரூபா 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டது. அதனையடுத்தே பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் அறிவித்தலின் படி 450 கிராம் பாணின் விலையானது 3 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப மாவினால் தயாரிக்கப்படும் ஏனைய உணவு பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

## முஸ்லிம்...

வேளை தமது கட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள், குறிப்பாக நிசாம் காரியப்பர் போன்றவர்கள், கட்சியின் முழுமையான இணக்கப்பாடு இல்லாமல் தான்தோன்றித்தன்மாக இது போன்ற விடயங்களில் கருத்துக்களை வெளியிடக்கூடாது என்றும் தமது கட்சி கூட்டத்தில் எச்சரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸை அரசுக்கு வெளியே தள்ளிவிட வேண்டும் என்று தருணம் பார்த்திருக்கும் சக்திகளுக்கு இவை இடமளித்து விடும் என்றும் அவர் கூறினார். (எ-11)

## சுதந்திரமான வாழ்வு...

தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் , மக்களின் தேவைகளை அறிந்து கொள்வதற்காகவும் இந்த மே தினக் கூட்டத்தை யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்தவுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு பெறும் நோக்குடனுமே இங்கு வந்துள்ளோம்.

எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த மே தினத்தை யாழ். மாவட்டத்தில் கொண்டாடவுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் மே தினத்தை நடத்தவுள்ளது.

நாம் எல்லோரும் இலங்கை மக்கள் என்ற உண்மையையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் முகமாக இந்த மே தினக் கூட்டத்தின் ஊர்வலங்கள் இருக்கப்போகின்றன.

பயங்கரவாதம் இந்த நாட்டில் இல்லாது ஒழிந்துள்ளது. ஆனாலும் வட பகுதி மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் தேவைப்படுகின்றது. அத்தோடு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை இவைகள் தொடர்பாக பாராளுமன்றில் பேசுவேன்.

அரசியல்வாதிகள் யாரும் வந்து பார்த்திடாத உங்களை நான் வந்து சந்தித்துள்ளேன். உங்களின் தேவைகளை அறிந்து கொள்வதற்காக. எனது கட்சியில் இன,மத, மொழி வேறுபாட்டினை ஏற்படுத்தக்கூடியதான கருத்துக்களையாரும்வெளியிட அனுமதிப்பதில்லை. அவர்களுக்கு எனது கட்சியில் இடமும் இல்லை.

நாம் எல்லோரும் இலங்கை மக்கள் என்ற ரீதியில் செயற்பட வேண்டும். ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கத்திலிருந்து விடுபட்டு புதிய அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

**புதிய தாசன் கல்வி நிலையம்**

ஜெற் மோட்டேல் அருகில், கே.கே.எஸ்.றோட் , சுன்னாகம்.

**A/L 2014**

**கலை, வர்த்தகப் பிரிவுகள்**

| | |
|---|---|
| பொருளியல் | தமிழ் |
| வரதராஜன் | க. ஜெசிந்தன் |
| வணிகக்கல்வி | இந்/சம, இந்/நாக |
| முரளி | சுரேஸ் |
| கணக்கீடு | நாடக/அரங் |
| பகீரதன் | ரமேஸ் |
| அரசியல் | புவியியல் |
| பொன் சந்துரு | குமரன் |
| அளவையியல் | வரலாறு |
| E.S. பவன் | சுதன் |
| வணி/புள்ளி, பொதுஅறிவு | விவசாயம் |
| தவசேகர் | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம் : 30.04.2012 திங்கட்கிழமை

நேரம்: மாலை 3.45 மணி (8234)

power-one Renewable Energy Solutions AURORA

HYUNDAI HEAVY INDUSTRIES CO.,LTD.

# உங்கள் மின்சாரக்கட்டணத்தை குறைத்துக்கொள்வது எப்படி?

ஆண்டுக்கு சராசரி 20% மின்சார கட்டண அதிகரிப்பினை கடந்தபல ஆண்டுகளாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனை சூரியகலம் (Solar Panel) Net Metering முறையின் மூலமாக உங்கள் வீடுகள், வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் போன்றவற்றின் மின்சார கட்டணத்தினை முற்றாகவோ / பகுதியாகவோ குறைத்துக்கொள்ள முடியும்.

- மின்கல பாவனை இல்லை (No Battery)
- பராமரிப்பு செலவுகள் இல்லை
- மேலதிக கட்டணம் எதுவும் இல்லை
- எரிபொருள் பாவனை இல்லை

இலங்கை மின்சார சபையின் அனுமதியுடாகவே பொருத்துக்கள் மேற்கொள்ளப்படும்

**உங்கள் முதலீட்டினை 4 வருடத்தில் மீளபெற்றுக்கொள்வதுடன் இலவச மின்சாரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்**






**134 வருடம் பழமை வாந்த நிறுவனத்தினால் சூரியகலத்திற்கு 25 வருடங்களும் இன்வேட்டரிற்கு 5-10 வருடங்களும் உத்தரவாதம் வழங்கப்படும்**

தொடர்புகளுக்கு மனோகரன் : 0777 415338

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

EBC

**E.B. CREASY & CO. PLC**
98, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
Tel: 011 247 8770-9 Fax: 011 247 8775

ஸ்ரீராம் எலக்ரோனிக்ஸ் : இல. 105, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 8646 Mob: 077 604 8646

## சமையலாள் தேவை

புதிதாக திறக்கப்படவுள்ள உணவகம் ஒன்றிக்கு பிரதான சமையலாள் தேவை.

தொடர்பு : 0776 539 499 (8265)

## தென்னிந்திய இசை நிகழ்ச்சி

தென்னிந்திய பிரபல திரைப்பட பாடகர் T.M. சௌந்தராஜன் அவர்களின் புதல்வன் T.M.S. செல்வகுமார் அவர்களின் இசை நிகழ்ச்சியை உங்கள் கோவில்களிலோ அல்லது பொது இடங்களிலோ மே மாதத்தில் நடாத்த விரும்புவோர் தொடர்புகளுக்கு

0771827274 (C-6459)

மாபெரும் விசேட விலைக்கழிவு

## Jet D Express Courier Service



உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய

Germany Over 10Kg - 800/=
France Over 10Kg - 850/=
UK Over 5Kg - 1000/=
UK Over 10Kg - 750/=

Germany 1kg - 900/=
UK 1kg - 500/=
Swiss 1kg - 500/=
France 1kg - 500/=
Canada 1 kg - 600/=

*.25kg மேற்பட்ட பொருட்களுக்கு 450/= அறவிடப்படும்

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்

Note : *.கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்க[illegible]
*.வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை,
(குணம் ஹெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150,0772187301

No.77E,Manning Place,
Wellawatta,Colombo 6,
T.P:- 0112363873
0776509909

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

## அமரர் இளையதம்பி வேலும்மயிலும்

(8258)



அன்புடையீர்!

எம்மை துன்பக் கடலில் ஆழ்த்தி விட்டு 31.03.2012 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இளையதம்பி வேலும்மயிலும் (E.V.M)**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 30.04.2012 திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் தெனியம்மன் கோவிலடி, வியாபாரி மூலை, பருத்தித்துறையில் கிரியைகள் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இங்ஙனம்
குடும்பத்தினர்.
தம்பசிட்டி, பருத்தித்துறை.
தொ.பே:-0773400970

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.